# சைவநீதி



ரூ.20/-

ஈசுர வைகாசி

உ
சிவமயம்

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | புண்ணியம் ஆம் பாவம் போம் | | 1 |
| 2 | அந்தணர் | இலக்கணவித்தகர். இ.நமசிவாய தேசிகர் | 2 |
| 3 | சேக்கிழார் காட்டும் சைவ நீதி | பண்டிதர். மு.கந்தையா | 3 |
| 4 | மாதமகத்துவம்-வைகாசி விசாகம் | செ. நவநீதகுமார் | 4 |
| | இடப விரதம் | " | 5 |
| 5 | கீரிமலை நகுலேஸ்வரம் | வித்துவான். வ. செல்லையா | 6 |
| 6 | சைவ சித்தாந்த அறநோக்கு | திருமதி. கலைவாணி இராமநாதன | 10 |
| 7 | விரதம் அநுட்டிப்பவர் செய்ய வேண்டியவை | | 15 |
| 8 | ஆலயங்கள் யாருக்காக | முருக. வே. பரமநாதன் | 16 |
| 9 | திருவாசகம் - நூலமைப்பு | பண்டிதர். சி. அப்புத்துரை | 17 |
| 10 | ஞானப்பால் பருகித் தேவாரம் பாடியது | செயா | 19 |
| 11 | முதற்றிருமுறை முதலாம் பதிகம் | | 21 |
| 12 | நினைவிற் கொள்வதற்கு | | 22 |
| 13 | பயில்வோர் பயிற்சிக்கு | செல்வி. செ.மனோகரராணி | 23 |
| 14 | சைவசமய அறிவுப்போட்டி இல.1 | | 24 |


சைவநீதியில் பிரசுரிப்பதற்குத் தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர்:1 ஈசுர வைகாசி சைவ சமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ்:2

*கௌரவ ஆசிரியர்*
சைவப்புலவர்மணி வித்துவான்
திரு. வ. செல்லையா

*நிர்வாக ஆசிரியர்*
சிவஸ்ரீ பால ரவிசங்கரக்குருக்கள்
திரு. செ. நவநீதகுமார்

*பதிப்பாசிரியர்*
திரு. ச. சக்தி விக்னேஷ்வரன்

61/1F, பீர்சாய்ப்பு வீதி
கொழும்பு 12.
இலங்கை.
தொ:பேசி/ஃபக்ஸ்:438967

## புண்ணியம் ஆம் பாவம்போம்

"புண்ணியம் ஆம் பாவம்போம்" என்பது ஒரு பழம் பாடலின் முதலடியின் முற்பகுதி. கருத்தாழங் கொண்டது. இதில் இரண்டு விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. முதலாம் பகுதி புண்ணியம் ஆம் என்பது. அதன் பொருள் புண்ணியமே செய்யத்தக்க தென்பது. மற்றப்பகுதி பாவம் போம் என்பது. அதன் பொருள் பாவம் விலக்கவேண்டுவதென்பது. செய்யத் தக்கவைகளைச் செய்து விலக்கவேண்டியவைகளைச் செய்யாதொழிதலே புண்ணியமாம். செய்யத் தக்கவைகளையும் செய்யாது, விலக்கவேண்டிய வற்றையும் செய்தால் அது பாவமாம். இங்கு எமக்கு விதிக்கப்பட்டன, விலக்கப்பட்டன என்பன இரண்டு உண்டு என நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

எமக்கு விதிக்கப்பட்டன எவை? அவைதாம் புண்ணியங்கள். நமக்கும் பிறர்க்கும் நன்மைதரும் செயல்களைச் செய்தல். விலக்கப்பட்டன யாவை? அவைதாம் தீமையான செயல்களைச் செய்தல், செயலால் மாத்திரமன்றி மனத்தாலும் தீங்கு செய்யாமை. "நினைத்தலும் செய்கையை ஒக்கும்", இந்த நிலையில் இதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். விதித்தன செய்தல் புண்ணியம்; விலக்கியன ஒழிதலும் புண்ணியமே. விதித்தன செய்யாதொழிதல் பாவம்; விலக்கியன செய்தலும் பாவமே. இது ஒரு கணித வாய்ப்பாடு போன்றது. இதனைச் சமீகரணமென்று கணித வாய்ப்பாட்டாற் சொல்லலாம். இதனைக்கணிதம் போல் செய்து விடுவித்தால் மறுமொழி கிடைக்கும்.

மனித வாழ்க்கையென்பது ஒரு செயற்பாட்டமைப்பு. அச்செயல்களும் பாவபுண்ணியங்களாற் பின்னப்பட்டேயுள்ளன. எம்வாழ்க்கையிற் பிறப்பு இறப்பு முக்கிய இடம்பெறுகின்றன. இவையும் பாவபுண்ணிய விளைவுகளே. "போன நாட் செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்" இப்பகுதி மிகவும் முக்கியமானது. இதனை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. முன்பிறப்பு இருந்ததா? அப்பொழுது செய்தது இப்பொழுது எப்படி வந்து சேரும்? என்றெல்லாம் நமக்குள் கேள்விகள் எழுந்தபடியே இருக்கும். இதனை எப்படி நம்புவது என்பதுதான் பலரதும் முடிவாக அமையும்.

பட்டினத்தார் "முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே" என்று ஆணித்தரமாகத் தன் அனுபவத்தில் இதற்கு விடை தருகின்றார். இன்னும் "முன்னைச் செய்தது பின்னைக்காம்" என்னும் பெரியோர் கூற்றும் இங்கு கொள்ளத்தக்கது. இங்கு வினை என்ற சொல் வருகிறது. வினை- செயல், அஃதாவது செயற்பாடு. நல்ல செயற்பாடு நல்வினை என்றும், அல்லாத செயற்பாடு தீவினை யென்றும் கொள்ளப்படும். நல்வினை தீவினைகளின் விளைவு புண்ணியபாவங்களே. புண்ணிய பாவங்களின் பெறுபேறு இன்பதுன்பங்களே. இவற்றின் முடிந்த முடிபாக நாம் கொள்ள வேண்டியது தீதொழிய நன்மை செயல் என்பதே.

# அந்தணன்

இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர்.

சைவர்கள் இறைவனின் பெயரை மக்களுக்கு இட்டு வழங்குவதுண்டு. அது ஒன்றன் பெயர் மற்றொன்றற்காதல் நோக்கி ஆகுபெயருள் அடக்கிக் கொள்ளப்படும். ஆயின் மக்களின் பெயரை இறைவனுக்காக்கி வழங்குவதில்லை. வழங்கவுங் கூடாது.

அந்தணன் என்ற சொல் ஒருசாதிப் பெயராக வழங்குகின்றது. திருவள்ளுவ நாயனார் "அறவாழி அந்தணன்" என அதனை இறைவனின் பெயராக வழங்குகின்றார். ஆதலின் இவ் விடத்தும் அந்தணன் என்ற சொல்லை இறைவனின் பெயராகக் கொண்டு சாதிக்கு ஆகுபெயராகக் கொள்வதே பொருத்தமானது.

"அந்தணர் என்பார் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்றகுறளில் திருவள்ளுவநாயனார், அந்தணர் என்ற சொல்லை, தண்மையுடைமையால் வந்த காரணப் பெயராகக் கொள்ளுகின்றார். அறவோரே, தண்மையுடையராதல் கூடுமாதலின், அறவோரே அந்தணர் எனப்படுவார்.

அறத்தை உரைத்த முதல் நூல் ஆசிரியனும், அறச்சமுத்திரமுமாகிய இறைவனே அந்தணன் எனப்படுவான். இலக்கணத்தில், இறைவனே முதல் நூல் ஆசிரியன். அவன் வழிப்பட்ட பிறரும் முதல் நூல் ஆசிரியர் ஆவார் என்று கொள்ளுமாறு போல, அறமுணர்ந்து இறைவன் அருள் வழிப்பட்ட ஏனையோரும் அந்தணர் எனப்படலாம்.

மேற்கூறியவற்றால், அந்தணன் என்ற சொல் காரண இடுகுறிப் பெயராய் இறைவனையும், காரணப் பெயராய் ஏனோரையும் உணர்த்து மென்று கொள்ளலாம். அந்தணர்க்கு மக்களா யினாரையும், அவர்கள் அந்தண ஒழுக்கம் அற்ற வராயினும், அந்தணர் என்று வழங்குவதுண்டு. அவ்விடத்து அந்தணன் என்ற சொல்லை இடுகுறிப் பெயரளவில் கொள்ளுவதே பொருந்துவதாகும்.

அறவாழி அந்தணன் றாள்சேர்ந்தாற் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது (திருக்குறள்)

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரு மறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே.
(திருவாசகம்)

# சேக்கிழார் காட்டும் சைவநீதி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பண்டிதர். மு. கந்தையா

சமயசிந்தனை வளாகத்தில் முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்தது கடவுட் புதிர். அதற் கிரண்டாவதாயுள்ளது தர்மம் பற்றிய புதிர். புதிராந் தன்மையில் இரண்டும் ஓரேதரம். இருக்கிறதென நிரூபிப்பதைவிட இல்லை என நிரூபிப்பது மகா கஷ்டம் என்றநிலை இவற்றுக்குளதாகும். உண்மை நிலையிற் கடவுள், எதிர்நிறுத்திக் கண்டறியப்படுவ தொன்றன்று. மாணிக்கவாசக சுவாமிகள், காரைக்காலம்மையார் போன்ற மேல் மட்ட மெய்ஞ்ஞான மேதைகளால் உறுதிப் படுத்தப்பட்ட ஒன்று இது. "ஒருவனே உன்னை ஓலமிட்டலறி உலகெலாந் தேடியுங் காணேன்", மாணிக்கவாசகர் திருவாசகம்.

"அன்றும் திருவுருவங் காணாதே யாட்பட்டேன்.
இன்றுந் திருவுருவங் காண்கில்லேன் - என்றுந்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட் கேதுரைக்கேன்
......................................."

காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி என்றாற் பின்னைப் பேசுவானேன். தர்மத்துக்கும் நிலையிதுவே. மனுஸ்மிருதி, திருக்குறள் போலும் நூல்கள் தர்மத்தின் குணாகுணங்களைப் பலபட விரித்துரைக்கும். ஆனால் தர்மம் என்றால் என்ன? கேள்விக்கு வரைவிலக்கணப் பாங்கான நேர்விடை அவற்றிலு மில்லை. அவ்வளவுக்குத் தர்மம் ஓர் புதிரா கின்றது. இருந்தும் ஒவ்வோர் சமயச் சார்பிலும் தர்மம் பற்றிய விளக்கம் அவ்வவற்றியல்புக்கேற்ற ஒவ்வோர் பாணியில் ஒவ்வோரளவில் இருந்து வருதல் கண்கூடு. அவ்வச் சமயங்களின் மூல நூல்களும் அவற்றின் வழிவந்த சமய பாரம்பரியங்களும் அதற்குக் காரணமாகின்றன. எங்கள் சைவ சமயத்தின் நிலையும் இதுவே. இதன் மூல நூல்களான வேதம், சிவாகமம் என்பனவும் அவற்றைத் தழுவியமைந்த நம் முன்னோர் வாழ்க்கைப் பாரம்பரியங்களும் நம்மவர் தர்ம அநுசரணைக்குக் காரணமாகின்றன.

"தர்மம் என்பது பரமேஸ்வரன் வாக்கி லிருந்து வேதாகமங்களின் மூலமாக வந்து ஆன்றோர் வாழ்க்கையில் இடம்பெற்ற ஒரு பண்பாகும்." திருக்குறட்பாயிரத்துக்கு விளக்க வுரை எழுதிய பொன்னம்பலம் இராமநாதன் என்ற தமிழ் மேதை. தர்மத்துக் களித்த விளக்கம் இதுவாகும்.

எனினும், பொதுவிற் கருதப்படுவது போன்று தர்மம் தான்தோன்றியுமல்ல, தானியங்கியுமல்ல. உலகு சம்பந்தப்பட்ட மற்றெல்லா விஷயங் களையும் போல இதுவும் சிவனால் வகுக்கப் பட்டது. சிவனாணையால் விளக்கப் படுவது என்ற பிரத்தியேக இயக்கநிலை சைவத்திலுண்டு. சிவனை இடபாரூடர் - விடையேறியாக நம் சமயாசாரியர்கள் எல்லாரும் கண்டு காட்டியமை இவ்வுண்மையை அறிகுறி மாத்திரையால் உணர்த்திய வாறாகும். ஒரு நோக்கில் சிவனுக்கு இடபமாகுவது பக்குவான்மா, மற்றொரு நோக்கில் தர்மம், சைவசமய உண்மை யுணர்ச்சிக்கு வளமூட்டுதலில் இரண்டும் ஒத்த தன்மையன. எதுவாயினும் ஒரு இடபத்தில் வைத்தன்றிச் சிவன் தன்னைக் காட்டியிருப்பதாகச் சைவநூற் பரப்பில் எங்கேனுங் காணப்பட்ட தில்லை.

இவ்வாற்றால், தர்மம் என்பது சிவனால் வகுக்கப்பட்டுச் சிவனாணையால் நடத்தப்படுவது. அவனாணை அது என்றதற்கான அச்ச உணர்வுபூர்வமாக உள்ளது உள்ளபடி அநுசரிக்கப்பட்டதாக வேண்டியது என்ற நிலை தெளிவாகும்.

"தர்மே சர்வம் பிரதிஷ்டிதம்" - தர்மத்தில் எல்லாம் நிலைநிறுத்தப் பெற்றுள்ளன. "இஷ்ட பிராப்தி அநிஷ்டநிராஹாரா லௌகிகோபாய: தர்ம:" தீங்கென வெறுக்கப்படுமவற்றை நிராகரித்து நன்றென விரும்பப்படுவனவற்றை அடையவைக்கும் வாழ்க்கை உபாயம் தர்மம். இவை மனுஸ்மிருதி என்ற தருமநூற் கருத்துக்கள். இவற்றின் வண்ணம் உயிர்வாழ்க்கையிற் சம்பந்தப்படும் லௌகிகம்

ஆத்மிகம் என்ற இரு பகுதிக்குமுரிய சகல விஷயங்களும் தர்மத்திலடங்கும். உய்யும் உள்ளம் படைத்தோர் தம் வாழ்வில் அநிஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களைப் பெருக்கும் நோக்கில் தர்மத்தை அது சிவனாணை என அறிந்து அநுஷ்டிக்கற் பாலர் என்றாகிறது.

அனைத்து விஷயங்களுமென்றதனால் குடும்பவியல், சமூகவியல் ஆதியன போல நீதி பரிபாலனமென்னும் அரசியலும் தர்மத்திலடங்கும். இவற்றுள் அரசியல் என்பது ஏனையவற்றின் தர்மநிலைகளும் வழுவாதிருக்குமாறு அவற்றை யும் அநுட்டித்துக்கொண்டு தானும் தர்மநிலை வழுவாதிருக்க வேண்டிய மாபெரும் பொறுப்புள்ள தாகும். தான் தர்மத்தில் நிலைபெறாத அரசியல் ஏனைய துறைகளில். தர்மம் நிலைபெறச் செய்யுமென்றெதிர்பார்க்க முடியாது. இ∴திருக்க,

திருவள்ளுவர் அரசியலுக்கு வழங்கியுள்ள பெயர் இறைமை. அதாவது இறையின் தன்மை. என்றால், உலகை நடத்தும் முதன்மைப் பொறுப்புள்ள இறைவனே, மக்களுருவில் நேர் நின்று மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து உதவவல்ல ஒருவனிடம் வைத்துள்ள ஆணைமகிமையே இறைமை என்பது. அரசியல் பற்றிக் கூறும் அதிகாரத்துக்குத் திருக்குறளில், "இறைமாட்சி" என்றே பெயரிருத்தலுங் காணத்தகும்.

இவ்வகையில் தர்மப்பிடி நழுவாத இறைமை நடாத்திய மன்னனொருவன் மாட்சியைத் தமது காவிய முகப்பில் நிறுத்துகிறார் சேக்கிழார். (தொடரும்)

மாத மகத்துவம்

# வைகாசி விசாகம்

செ. நவநீதகுமார்

சூரபன்மன்முதலான அவுணர்கள் தேவர்களைத் துன்புறுத்தினர். தேவர்கள் சிவபெருமானிடஞ் சென்று அவுணர் தம்மை வருத்துவதாயும் இத்துன்பத்தை நீக்குவதற்கு,

"ஆதியு மீறு மன்பு மருவமு முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்குமின்பமுந் துன்பு மின்றி
வேதமுங் கடந்து நின்ற விமல வோர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க"

என்று வேண்டிக்கொண்டனர். அவுணர் துன்பத்தினின்றும் தேவர்களைக் காக்கத்திருவுளம் கொண்டாரிறைவன். ஈசானம் தற்புருஷம், அகோரம் வாமதேவம் சத்தியோசாதம், அதோமுகம் என்கின்ற ஆறு திருமுகங்களிலும் உள்ள நெற்றிக்கண்களில் இருந்து ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்து அக்கினியிடத்திற் கொடும்ப, அக்கினி வாயுவிடத்துக் கொடுப்ப, வாயு கங்கையில் விட, கங்கை சரவணப் பொய்கையிடத்துச் சேர்த்துச் சரவணப்பூம்பொய்கையிலே பொறிகளாறும், ஆறுகுழந்தைகளாக விளங்கின.

அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய

ஆறு பொறிகளும் குழந்தையுருவான தினமே வைகாசி மாதத்து விசாக நாளாகும் திருமால், கார்த்திகைப் பெண்கள் அறுவரையும் அழைத்து அக்குழந்தைக்குப் பாலூட்டுவித்தார். விசாக நாளில் தோன்றியதால் விசாகன் என்ற பெயர் முருகனுக்கு அமைந்துள்ளது விசாக நட்சத்திர அதிதேவதையும் முருகனே.

இத்தினத்திலே முருகன் ஆலயங்களில் மகோற்சவம் வசந்தோற்சவம், முதலான சிறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன.

# இடப விரதம்

ெச. நவநீதகுமார்



இடப வாகனம், இடபக் கொடி உடையவர் சிவபெருமான். முப்புரங்களை அழிப்பதற்காகத் தேரில் சென்றார் இறைவன். மேருமலை வில்லாக வும் வாசுகி நாணாகவும் திருமால் அம்பாகவும் அமைந்தன. அம்பினால்தானே சங்காரம் நிகழும். ஆதலால் தன்மூலம்தானே திரிபுர சங்காரம் நிகழப் போவதாக எண்ணிக் கர்வம் கொண்டார் திருமால். இதை அறிந்து இறைவன் சிரித்தார். அந்தச்சிரிப்பாலேயே திரிபுரங்களும் எரிந்து அழிந்தன. திருமால் பயந்து இடபமாக மாற, இறைவன் தேரினின்றும் நீங்கி இடபத்தில் ஆரோகணித்துக் காட்சி கொடுத்தார். சர்வசங்கார காலத்தில் தரும தேவதை தவம் புரிந்து இடபமாகி இறைவனைத்தாங்கும் பேறு பெற்றது. சிவமூர்த்தங்களில் ஒன்று இடபாரூடர்.

சிவ விரதங்களுள் ஒன்று இடபவிரதம். இவ்விரதம் இடப மாதமாகிய வைகாசி மாதத்தில் வரும் பூர்வ பக்க அட்டமியில் அதாவது வளர்பிறை எட்டாம் நாளில் அனுட்டிப்பதாகும்.

இவ்விரதமனுட்டிப்பவர் அதிகாலையில் எழுந்து இடப வாகனத்தில் எழுந்தருளியுள்ள உமையம்மை உடனாய சிவபெருமானைத் தியானித்த வண்ணம் சுத்தமான நீரில் நீராடி அனுட்டானம் அல்லது சந்தியாவந்தனம் செய்தல் வேண்டும்.

தங்கத்தால் அல்லது வெள்ளியால் இடபா ரூடத்திருவுருவை அமைத்துக் கும்பம் ஸ்தாபித்து, இறைவனை அதிலே எழுந்தருளப்பண்ணிப் (பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) பஞ்ச கவ்வியத்தால் அபிஷேகம் புரிந்து சிவாகம முறைப்படி பூசை வழிபாடுகள் செய்தல் வேண்டும். இவ் வண்ணமாகப் பகலில் வழிபாடியற்றியபின் இரவிலே இறைவனின் திருவடியைத் தியானித்துச் சிவசரிதங் களைச் சிராவணம் செய்து மறுநாட்காலையில் நீராடி நித்திய கரும அனுட்டானங்கள் முடித்து. சிவாலயஞ் சென்று வழிபாடியற்றி கும்ப விம்பங்களை வேதியருக்குத் தானம் கொடுத்து அவர்களுக்குப் போசனம் கொடுத்துச் சிவனடியாரோடும் பாரணை பண்ணல் வேண்டும்.

"பாற்கடற்றுயில் பண்ணவன் பங்கயத் திறைவ
னாற்றிசைப்படு மெண்மர் வானடக் குறுங் கதிர்கள்
விற்றுவேறுள தேவரிவ் விரதநோற்றன்றோ
போற்றருந்திறற் றெய்வவாகனத்தொடும் பொலிந்தார்"

(உபதேச காண்டம்)

திருமால், பிரமன், சூரியன், சந்திரன், அட்டதிக்கு பாலகர்கள் இந்திரன் முதலாய தேவர்கள் இவ்விரதத்தை அனுட்டித்து புகழ்தற்கரிய வல்லமை தாங்கிய வாகனங்களைப் பெற்றார்கள்.

ஒப்பற்ற ஏக சந்திரவட்டக்குடையை உடைய விச்சுவ சேனன் என்ற அரசன், வசிட்ட முனிவரால் இவ்விரதத்தை அனுட்டித்து முக்காலங்களையும் உணர்ந்து இறுதியில் திருக்கைலாய மலையில் வசிக்கும் பேறு பெற்றான்.

விதுருதன் என்னும் அரசன் இவ்விரதத்தை நோற்று மூவுலகங்களையும் ஆட்சிபுரிந்து பின் காய சித்தியினால் பரகாயப் பிரவேச சித்தியும் பெற்றான்.

# கீரிமலை நகுலேஸ்வரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி............)

வித்துவான் வ. செல்லையா

**மகோற்சவம்:-**

இந்த முறையிலே மூலமூர்த்திக்கு மாசிமாதச் சிவராத்திரியைத் தேர்த்திருவிழாவாகக் கொண்டு பிரதான வாயிலிலே கொடியேற்றத் திருவிழாவை நிகழ்த்தி 15நாள் மகோற்சவம் நடாத்தப்பட்டு வருகின்றது. இதனைவிட அம்மன் வாயிலிலே கொடியேற்றித் திருவிழா நடைபெறு கின்றது. இது சித்திரை வருடப் பிறப்பைத் தேர்த்திருவிழாவாகக் கொண்டு மறுநாள் தீர்த்தத்துடன் முடிவுறும். இங்கு இருபட்ச மகோற்சவத்தின் போதும் முற்காலத்திற் பஞ்சரத பவனி நடந்ததை மக்கள் இன்றும் பெருமையாகக் கூறிக்கொள்கின்றனர். இதற்கு அடையாளச் சுவடுகளும் உண்டு. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின்பு ஒருதேர்ப்பவனி நடந்தது. தற்பொழுது பரிபாலனத்தில் இருக்கும் சிவாச்சாரியாரின் பெருமுயற்சியால் முத்தேர்ப் பவனி சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இக்காலச் சூழ்நிலையால் ஆலயம் படையினர் கைவசமாயிற்று. அங்குள்ள தேவை யான ஆவணங்கள், விக்கிரகங்கள், புராண இதிகாசநூல்கள் என்பன மீண்டும் கிடைப்பது என்பது தெய்வ சித்தமே.

**விழாக்கள்**

மாத சங்கிராந்தித் தீர்த்தம், வருஷப்பிறப்பு, சித்திராபூரணை, வைகாசிவிசாக அபிஷேகம், ஆனி உத்தர நடேசர் அபிஷேகம், ஆவணி மூல உற்சவம், மானம்பூ, புரட்டாதிச்சனி வழிபாடு, ஐப்பசிச் சுக்கிரவார உற்சவங்கள், கார்த்திகைத் தீபக்காட்சி, ஆர்த்திராதரிசனம், சுவர்க்க வாயிலேகாதசி, தைச்சங்கிராந்தி தீர்த்தம், தைப்பொங்கல், தைப்பூச அபிஷேகம், மாசிமகத் தீர்த்தம், பங்குனி உத்தர அபிஷேகம், போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. அத்துடன் மாதச்சிவராத்திரி விழாக்கள் ஒழுங்காக நடந்து வருகின்றன. சோமவாரத் திருவிழா அலங்காரமாக நடந்து வருகின்றது. கார்த்திகை மாதத்தில் வருகின்ற சோமவார விழாக்கள் முழுவதும் மிக்ச் சிறப்பாக நடைபெற்று அம்மாதக் கடைசிச் சோமவாரம், சங்காபிஷேகத்தோடு நிறைவுறுகின்றது. சுக்கிரவாரவிரதங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன.

பிரதோஷ விரதம், கௌரி விரதம், வரலட்சுமி விரதம் என்பன மிக ஒழுங்காக நடைபெறுகின்றன. மிகத்தொகையானோர் விரதம் அனுட்டித்துப் பலனையும் பெற்று வருகின்றார்கள். புரட்டாதிச் சனி, நான்குவாரமும் திருவிழாவாகவே நடத்தப்பட்டு வருகின்றது. சனீஸ்வரருக்குத் தனியாக ஆலயம் அமைத்து விழா சிறப்பாக நடைபெறுகின்றது. கடைசிச் சனியன்று எள்ளெண் ணெய் எரிப்பதற்காக யாழ்ப்பாணத்தின் பலபாக மக்களும்வருவர். அன்று, நவக்கிரக தோஷ சாந்தி இறைவன் உள்வீதிவலம் வருதல் என்னும் திருவிழாவும் நடைபெறும். அத்துடன் மார்கழிமாத ஏகாதசி விழாவும் புராணபடனத்தோடு நடைபெற்று வருகின்றது.

**வழிபாட்டு முறை:-**

வழிபாட்டு முறை இந்த ஆலயத்திற்கு ஒரு சிறப்பைத்தருகின்றது. கீரிமலை நன்னீர் ஊற்று தீர்த்தமாக அமைவதால் அந்தியக் கிரியை களையும், பிதிர்க்கடமைகளையும் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கின்றது. இது தொடர்பாகவும் அங்கு வருவோர் தீர்த்தமாடி வழிபாடு செய்வர். கீரிமலை ஒரு சுகஸ்தானம். சூழலிலே தங்கி யிருக்கப் பல மடங்கள் உண்டு. இதன் காரணமாக அங்கு வருபவர்களும் அங்கு தங்கியிருப்பவர்களும் நகுலேஸ்வரத்தில் வழிபாடு ஆற்றி நல்ல பேறுகளைப் பெறுகிறார்கள். இதற்கு அனுட்டிக்கப்படுகின்ற விரதங்கள் மிகப்பல. அதற்காகவும் மக்கள் இங்கு தீர்த்தமாடி வழிபாடு செய்வர்.

விழாக்காலங்களிலும் மகோற்சவ காலங்களிலும் இங்கு மக்கள் வந்து தங்கி, விரதங்களை அனுட்டித்து வழிபட நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. நித்திய பூசைகள் காலம் தவறாமலும் விழாக்கள் நேரம் தப்பாமலும் நடாத்தப்படுவதனால் மக்கள் ஆலய தரிசனத்தில் ஈடுபடப் பெரிதும் விரும்புகின்றார்கள். நாவலர் சைவவினாவிடையிலே கூறிய ஆலய

தரிசன விதியும் பூசைவழிபாட்டு முறையும் இங்கு சிறப்பாக அனுட்டிக்கப்பட்டு வருகின்றன.

### கட்டிட சிற்ப ஓவிய அமைப்புக்கள்

கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், நிருத்தமண்டபம் ஆகியன மூடுகல் வேலைப்பாடுகளால் ஆனவை. அடித்தளம்கூட வெள்ளைகல் வேலைப்பாடுகளோடு கட்டப்பட்டுள்ளன. தூண்களும் சிற்ப நுட்ப வேலைப்பாடுகளோடு சேர்ந்த வெள்ளைக் கல் தூண்களே. மேற்றளம் வரிவர்க்க வேலைகளுடன் ஆக்கப்பட்டிருக்கின்றன. பரிவாரத் தெய்வங்கள் முதற்பிரகாரத்திலே சிறப்பாக அமைக்கப்பட்டுத் தனித்தனி ஆலயங்களாக்கப்பட்டு அவ்வவற்றுக்குரிய பண்டிகை கலசங்களோடு மிளிர்கின்றன. அதிலே விமானம் தள அமைப்போடு கூடியது. ஒவ்வொரு பண்டிகையிலும் அவ்வவற்றுக்குரிய சித்திர சிற்ப உருவங்கள் உள்ளத்தைக் கவரக்கூடியதாகப் பக்திப் பரவசம் ஏற்படுத்தக் கூடிய வகையிலே சமய வரலாறுகளைக் கதையாகக் கூறுவது போல அமைக்கப்பட்டிருக்கின்றன. உட்பிரகாரம் ஓடு வேயப்பட்டு நல்ல தள அமைப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றின் தூண்கள் வர்ண சித்திர வேலைப்பாடுகளோடு கூடியவை.

நிருத்த மண்டபமுகப்புச் சுவரிலே எம்பெருமானின் திருக்கல்யாண வைபவம் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கின்றது. நான்முகன் திருமணச் சடங்குகளைச் செய்ய விஷ்ணு தாரைவார்த்துக் கொடுக்க அமைக்கப்பட்ட அந்த ஓவியக் காட்சி கண்ணையும் கருத்தையும் கவரக்கூடியதாக இருக்கின்றது. தேவர்கள், பாற்கடலைக் கடைதல், ஆலகால விஷம் வெளிவருதல், இறைவன் ஆலகால விஷத்தை உண்ணுதல், போன்ற ஓவியங்களும் முதலாம் பிரகாரச் சுவரிலே வரையப்பட்டுள்ளன. பகீரதன் தவமிருந்து கங்கையை வரவழைத்தது ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்கின்றது. இன்னும் சமய சம்பந்தமான ஓவியங்கள் வரைவதற்கு இடங்கள் தயாரிக்கப்பட்டடிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை வரையப்பட்ட ஓவியங்களுக்கும், செதுக்கப்பட்ட சிற்பங்களுக்கும் இப்போதைய சூழ்நிலையில் என்ன நடந்திருக்குமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

### பிரகாரத் தெய்வங்கள்

உட்பிரகாரத்திலே இறைவனின் மூர்த்தங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சிற்ப ஓவியங்கள் அமைத்து அவற்றிற்கு வர்ணம் தீட்டப்பட்டு அவற்றிற்குரிய பண்டிகைகளுஞ் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் விநாயகர், பஞ்சலிங்கம், மகாலெட்சுமி, சண்முகர், வைரவர் என்னும் மூர்த்தங்களுக்காய ஆலயம் அமைக்கப்பட்டதோடு சனீஸ்வரனுக்கும், சண்டேஸ்வரருக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டு அவ்வவற்றுக்குரிய விசேட தினங்களில் விழாக்களும் உற்சவங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இரண்டாம் பிரகாரத்தின் வடபால் துர்க்கை அம்மனுக்கு விசேட கோயில் அமைக்கப்பட்டு நவராத்திரி விழாவும், மானம்பூ விழாவும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

நிருத்த மண்டபத்திற்கு வடபால் நடேசப் பெருமானுக்கு ஒரு ஆலயம் அமைத்து அம்மன் வாசல் போன்று அமைக்கப்பட்டு திருவிழா நடாத்தப்படுகின்றது. இங்கு அமைத்து உருவாக்கப்பட்ட நடேசப் பெருமானுக்கும் இந்தியாவில் உள்ள ஸ்தலங்களில் வார்க்கப்பட்ட நடேசர் சிலைகளுக்குமிடையில் ஒரு வேறுபாடு உண்டு என்று குமுதம் என்ற இதழில் குறிக்கப்பட்டுள்ளது. மற்றைய நடேசர் சிலைகள் விரித்த சடையுடன் காணப்படுகின்றன. இங்கு குவித்த சடையுடன் காணப்படுகிறது. இது ஒரு சிறப்பாகும். எல்லாப் பிரகாரத் தெய்வங்களுக்கும் உற்சவம், வீதி உலா நடத்தக் கூடியதாக ஐம்பொன்னால் ஆக்கப்பட்ட வார்ப்பு விக்கிரகங்கள் அதற்குரிய விசேட இடத்தில் வைக்கப்பட்டடிருக்கின்றன. இங்குள்ள விசேடம் யாதெனில் உற்சவ மூர்த்திக்கன்றி ஏனைய மூர்த்திகளுக்கும் விக்கிரகங்கள் ஐம்பொன்னால் ஆக்கப்பட்டு காட்சி அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

### நகுலேஸ்வரம் மீது எழுந்த நூல்கள்

நகுலாசல புராணம் ஏரம்பையராற் பாடப்பட்டது. திருவிழாக்காலங்களிலே இப்புராண படனம் நிகழ்த்தப்படுகிறது. புராணத்துக்கு உரை பிற்காலத்திலே செ.சிவசுப்பிரமணியம் அவர்களால் எழுதப்பட்டது. நகுலேசர் ஊஞ்சல்

குமாரசாமிப் புலவராற் பாடப்பட்டது. ஒவ்வொரு மகோற்சவ காலங்களிலும் தீர்த்த நிறைவில் ஊஞ்சல் நடைபெறுகின்றது. நகுலேஸ்வரர் சதகம் பண்டிதர். இ.நமசிவாய தேசிகர் அவர்களாற் பாடப்பட்டது. நகுலேஸ்வரர் பூங்கொத்து மயில்வாகனப் புலவராற் பாடப்பட்டது. நகுலமலைக்குறவஞ்சி சிவப்பிரகசம்பிள்ளை அவர்களாற் பாடப்பட்டது. நகுலேஸ்வர மான்மியம் நீர்வேலி ஸ்ரீ. ச. சிவப்பிரகாச பண்டிதர் அவர்களால் பாடப்பட்டது. இது வடமொழி நூலாகும். இதைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தவர் அ. குமாரசாமிப் புலவராவார். நகுலேஸ்வரம் மீது பத்திரசக் கீர்த்தனைகள் ஆசிரியர் செ. சிவசுப்பிரமணிம் அவர்களாற் பாடப்பட்டன. இன்னும் பல பிரபந்த நூல்களும், பதிகங்களும், அவ்வப்போது பாடப்பட்டு உள்ளன. அம்பாளுக்குத் தனி ஊஞ்சல் பண்டிதர் வே.சங்கரப்பிள்ளையால் பாடப்பட்டது. நகுலகிரிப் புராணம் பிரம்மஸ்ரீ கா. அப்பாசாமி ஐயரவர்களால் பாடப்பட்து.

**பௌராணிக மரபு.**

பண்டைய காலத்திலே யாழ்ப்பாணத்திலே புராணபடனம் விழாக்கோலமாக நடாத்தப்பட்டு வந்துள்ளதை யாவரும் அறிவர். இதற்கு மெருகூட்டியவர் நல்லைநகர் ஆறுமுகநாவலர். சுவையூட்டியவர் மகாவித்துவான் பொன்னம் பலபிள்ளை அவர்கள். இதற்குச் சுவையான பல கதைகளும் உண்டு. விரிக்கின் பெருகும் என அஞ்சி விடுத்தோம்.

**புராணபடனம்**

கீரிமலை நகுலேஸ்வரத்திலே புராணபடனம் அவ்வக்காலங்களிலே சிறப்பாக நடைபெறும். அந்தந்த புராணம் அந்தந்த புராணத்திற்குரிய வாயிலிலே நடைபெறும். நகுலேஸ்வரபுராணம் கொடித்தம்பத்திற்கு முன்பக்கத்தில் ஆதிமூலவாசலிலே நடைபெறும். பெரியபுராணபடனமும் அதிலே நடைபெறும் கந்தபுராணம் முருகன் வாசலிலே நடைபெறும். ஏகாதசிப் புராணம் கூட இங்கு நடைபெற்று வருகின்றது. அது விஷ்ணு வாசலிலே நடைபெறும். இங்கு புராணபடனம் ஆரம்பிக்கும் தினம் திருவிழாக்கோலமாக இருக்கும். கேட்போரும் பயன் சொல்வோரும் ஆசார அனுட்டான சீலராய்க் கலந்து கொள்வர். சிவாச்சாரியர்களே புராணபடனத்தைத் தொடக்கி மற்றவர்களையும் அதில் ஈடுபடுத்தி வருவர். இது ஒரு சிறப்பமிசமாகும்.


இங்கே ஏரம்பையர், அப்பாசாமி ஐயர் முதலிய பிராமணோத்தமர்கள் பயன் கூறினார்கள். நல்லைநகர் ஆறுமுகநாவலர் வழிவந்தோர் பலர் இங்கு பலகாலம் வந்து புராணபடனத்தில் பங்குபற்றியுள்ளனர். சுன்னாகம் குமாரசாமிப் புலவர், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, கைலாச பிள்ளை போன்ற பெரியோர்கள் அனைவரும் வழிவழியாகப் புராணபடனம் நிகழ்த்தினார்கள். பிற்காலத்திலே கருகம்பனை சைவப் பெரியார் சங்கரப்பிள்ளை அவர்கள் இந்தப் புராண படனத்தை வழிநடத்திச் சென்றார். இதனைத் தொடர்ந்து பண்டிதர் கதிரிப்பிள்ளை, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, பண்டிதர் நமசிவாயம், ஆசிரியர் சுப்பிரமணியம் என்போர் புராணபடனம் நிகழ்த்தினர். ஆசிரியர் நமசிவாயம் பண்டிதர் கனகசபை என்போர் சிறப்பாக இசையோடு புராணபடனம் செய்வதற்கு வசதியாக அப்பாடல்களைப் பாடிக்கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் பலர் இதில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள் என அறிகிறோம்.

**ஆலயத்தைப் பற்றிய ஆண்டுக் குறிப்புகளும் விசேட சம்பவங்களும்**
**சில எடுத்துக்காட்டுகள்:-**

ஆங்கிலேயர் காலத்தில் 1878 ஆம் ஆண்டு வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 24ஆம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கீரிமலைச் சிவன் கோயில் பற்றி ஒரு விஞ்ஞாபனம் தமது கையொப்பத்தோடு வெளியிட்டார்கள் "யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்திற்கு வடமேற்கே இரு மைல் தூரத்திலுள்ள கீரிமலையிலே ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது" என அந்த விஞ்ஞாபனம் தொடங்குகின்றது. பிரம்மஸ்ரீ கா.தியாகராசக்குருக்கள் அவர்கள் 1882ஆம் ஆண்டு சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் அச்சிடுவித்து வெளியிட்ட ஆவணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இக் கோயில் கட்டுவிப்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகள் விபரிக்கப்பட்டுள்ளன. 1879 ஆம் ஆண்டில் சைவசமயிகளுடைய பாக்கியக் குறைவினாலே நாவலரவர்கள் சிவபதம் அடைந்து விடக் குருக்கள்மாரது ஊக்கத்தினாலும், வண்ணார் பண்ணை வை. ஆறுமுகம் போன்ற சைவ

அன்பர்களது உதவியினாலும் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு 1895 ஆம் ஆண்டு மன்மத வருடம் ஆனி மாதம் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 18.07.1898 ஆம் ஆண்டில் தொல்புரம் ஸ்ரீ. மு. ஆறுமுகம் பிள்ளையின் உபயமாக வட்டுநகர் சு. சின்னப்பாசாரியாற் செய்யப்பட்ட இடப வாகனம் இக்கோவிலின் பழமையைக் காட்டும் சின்னங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. 1918 ஆம் ஆண்டு காத்திராப்பிரகாரமாகக் கோயில் தீக்கிரையானது. இத்தருணத்தின்போது அங்கு நின்ற அடியார்கள் பெரிய இடபவாகனத்தை கஷ்டப்பட்டு வெளியே கொண்டுவந்து சேர்த்தார்கள் என அறிகிறோம். இவ்வாகனம் வடிவமைப்பில் மிகச்சிறப்புடையது. இது இன்றுவரை அமைப்பில் சிதையாது காட்சி தருகிறது. ஆதீனகர்த்தாவாயிருந்த ஸ்ரீமத். தி.குமாரசுவாமிக் குருக்கள் 1947 ஆம் ஆண்டு சிவபதம் எய்தியமையாற் கோயில் வளர்ச்சி சிறிது தடைப்பட்டது. எனினும் அன்னாரது சிரேஷ்ட புத்திரரும் தற்போது கோயிலின் ஆதீனகர்த்தருமாகவுள்ள சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் தந்தையாரிலும் கூடிய ஊக்கமெடுத்து மீதித் திருப்பணி வேலையையுஞ் செய்வித்து 1953ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து குருக்கள்மாரை அழைப்பித்துக் கும்பாபிஷேகமும் நடத்தினார்கள். 1955ஆம் ஆண்டு சிவன் வாசல் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 1973ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. 1976ஆம் ஆண்டு தேவிவாசல் மகோற்சவம் ஆரம்பம்பமானது. இவ்வாறு காலந்தோறும் பல திருப்பணி வேலைகள் நிறைவேறி வருகின்றன. 108 அடி உயரங்கொண்ட 9 தள இராச கோபுரத்திருப்பணி ஆரம்பமாகித் தற்போது கால்வரி பூர்த்தியாகிய நிலையில் உள்ளது. நல்லைக் குமரன் மலரில் நல்லூர்ப் பெருங்கோயில் என்ற கட்டுரையில் திரு. கந்தையா குணராசா எம். ஏ. அவர்கள் கீரிமலையில் அமர்ந்திருந்த திருத்தம்பலேஸ்வரம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

கீரிமலையில் உள்ள திருத்தம்பலேஸ்வரன் கோயிலை அவர்கள் (போர்த்துக்கேயர்) இடிக்கு முன்னே விக்கிரகங்களை அக்கோயிலின் குருக்களாகிய பரசுபாணிஐயர் ஒரு கிணற்றில் போட்டு மணலால் தூர்த்து விட்டு அவ்விடத்தினின்றும் நீங்கினார், என்பதாகும். இப்பொழுது இருக்கும் ஆலயத்திற்கு அண்மையில் வௌவால் குகை ஒன்று இருக்கின்றது. அது ஒரு சுரங்கப்பாதை. சீமெந்துத் தொழிற்சாலைக்குக் கல் அகழ்ந்தெடுக்கும் போதுஅவ்வழிதென்பட்டது. கருங்கழி மண்ணும் நீரும் நிரம்பியிருந்த அப்பாதையை மக்கள் பலர்சென்று தரிசித்துள்ளனர். பின்னர் அதனைத் தொழிற் சாலையினர் அடைத்துவிட்டனர். இவை புதைபொருள் ஆராட்சியாளர்களால் ஆராயப்பட வேண்டியவை ஆகும்.



கீரிமலைத் தீர்த்தக் கேணி

# சைவசித்தாந்த அறநோக்கு

திருமதி கலைவாணி இராமநாதன
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சமுதாய நிகழ்வுகள் சாதாரணமானவை யல்ல. சரித்திரச் சின்னங்களாக மாறக் கூடியவை. புதிய சகாப்தத்தின் வரலாற்றுக் காட்சிகளான அவை, எதிர்காலத்தில் அதன் சாட்சிகளாகவும் மாறுவன. மாற்றம் காணவேண்டிய வரலாற்றுத் தடயங்களைத் தக்கவிதத்திலே தரிசிப்பதவசிய மானது. சைவ சித்தாந்தம் தனது மானுட நேயந் தழுவிய அறவியற் சிந்தனைகளைத் தான் எழுந்த காலமுதல் தமிழ்ச் சமுதாயத்திற்குப் புகட்டி வந்திருக்கின்றது. அறம் என்பதனை முன்னோர் எவ்வாறு சிந்தித்தனர், செயலாற்றினர் என்பதனை உற்று நோக்கின், தற்காலத்து விமர்சகர்கள் அவற்றினை எவ்வாறு எதிர்கொள் கின்றனர், ஏற்புடைத்தாக்குகின்றனர் என்பதும் சிந்தனைக்குரியது. "தமிழர்களின் அறம் அடிப்படைத் தத்துவ இயலையும் சமயத்தையும் சார்ந்து நிற்பதனால் அற ஆராய்ச்சிகள் ஓங்கித் தளைக்கவில்லை"[1] என்றோர் குறைபாடு நவீன அறிவியல் வளர்ச்சியினை முதன்மைப்படுத்துவோ ரிடையே நிலவுகின்றது.

தத்துவ இயலானது வாழ்வியலுக்குப் புறம்பான சிந்தனை என்ற நிலைப்பாடு மனிதன் சிந்தனையில் இருக்கும்வரை இக்குறைபாட்டி னை விலக்குவது கடினமே. அற ஆய்வுகள் வளர்ச்சியடைந்தால் மட்டும் போதாது. அவற்றினைக் கடைப்பிடிக்கும் மனஉறுதியும், திடசித்தமும், வைராக்கியமும், வாழ்விலே ஒருவருக்கு இன்றிமையாது இருக்க வேண்டும். ஆய்வுகளைச் செய்து நூல்களில் எழுதிவைப்பத னால் பலனில்லை. தார்மீக சிந்தனைகளை அக நோக்காகக் கொண்டு சித்தசுத்தியடையாத வரை மனிதவாழ்வு உயிரற்ற வெறும் வாழ்க்கையந்திர மாகத் தான் ஓடிக்கொண்டி ருக்கும். புறவாழ்க்கை யே பெரிதென மதிக்கும் ஓர் சமுதாயத்திலே விஞ்ஞான வசதிகள் வழங்கும் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது என்பதில் ஐயமில்லை. ஆனால் உயர்ந்த அறிவுத்தேடலானது ஆன்மீகத் தேடலாக மாற்றமடையாதவரை புறவாழ்வின் வாழ்க்கைத் தரத்திலே அமைதியின்மைகள் நிகழ்ந்து கொண்டேயிருக்கும். "அறிவின் இயல்பே வாய்மை, மகிழ்ச்சி, அகிம்சை, பொறுமை, சேவை, தூய்மை, நேர்மை, உறுதி, தன்னடக்கம், என்பதே யாகும்.[2] இதனையே சைவசித்தாந்தமும் "ஞானத்தால் அரனை அர்ச்சிப்போர் வீடெய்தல் அறிந்தோர்"[3] எனவும் " ஞானத்தால் வீடென்றே புராணாகமங்கள் சொல்லும்"[4]. "அஞ்ஞானம் விடப் பந்தமறும்"[5] எனக் கூறுவதும் இதனையொட்டியே அமைந்தது.

ஆகையினாலே தத்துவஞானம் என்பதே இங்கு "சிவஞானம்" எனப்பட்டது. சிவஞானம் என்பதே உயிர்களில் எல்லையற்ற அன்பினைச் செலுத்துவதும் அனைத்து உயிர்களிலும் இறைமை யைக்காணும் பேரன்பு பூணுவதுமாகும். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்" எனக் கற்றறிந்தும் மனித நேயமற்றவர்களின் செயற்பாடுகளைச் சித்தாந்தம் கண்டிக்கவும் தவறவில்லை. ஆதலால் அறிவிலாதவரே அன்பையும் சிவத்தையும் பிரித்துப் பார்ப்பவர். "பிறரது துயர்கண்டு மனமுருகுபவனே உண்மைச் சைவன்" எனச் சாத்திரம் கூறும். அதனையே "அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தன்நோய் போற் போற்றாக்கடை" எனப் பிறர் துயரம் கண்டு இரங்காதவரது அறிவினால் என்ன பயன் எனத் திருக்குறளும் சாடியது. நீதியும் அன்பும் நிறைந்த மானுட சமுதாயத்தையே சித்தாந்தம் நேசித்தது. இன்றைய போராட்டங் களும் இத்தேவைகளையே உணர்த்தி நிற்கின்றன.

ஆதலால் சைவசித்தாந்தத்தின் அறவியற் சிந்தனைகளை, குறியீடுகளைத் தொலை நோக்குக் கண்ணோட்டத்துடன் ஆராயவேண்டும். சமூக, பொருளாதார, நீதிகளை முறைப்படி ஆய்வு செய்தே நெறிப்படுத்த வேண்டும். நன்மை தீமைகளின் தாக்கங்களை சமூகம் உய்த்துணர வைக்கவேண்டும். உலகவளம், அதிகாரம்,

பொறுப்புணர்வு யாவும் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட மோசடியான ஏற்றத்தாழ்வு காரணமாகவே இன்று உலக நடைமுறைகள் சின்னாபின்னமாகியுள்ளன. தனிமனிதன், நாடுகள், குழுக்கள் என எங்குமே அடிப்படை மனித உரிமை மீறல்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. சத்துணவு. ஆடையின்மை, கல்வி வசதியின்மை யாவும் விஷம் போல ஏறுகின்றன. சகமனிதரை மதிக்கும் மனோபாவமோ, மனித நேயமோ அருகி மனிதப் பண்புகள் வீழ்ச்சியுறுமோ என்ற அச்சவுணர்வு உயர்ந்த ஆன்மீக சிந்தனையாளர் மத்தியில் வேதனையைத் தோற்றுவித்துள்ளது.

சித்தாந்த சமய சிந்தனையில் தருமம் அல்லது அறம் இறைமையின் மறுபெயராகவே நிலைபெற்றுள்ளது. தருமம் வேறு இறைவன் வேறு என்று பிரித்துப் பார்ப்பதிலேதான் இன்றைய தவறுகள் பல நடைபெற ஏதுவாகின்றன. தேவர்கள் என்பது நற்பண்புகளின் ஓர் உருவகமெனலாம். கந்தபுராணம் "தருமம் என்பதோர் பொருள் உளது" என்பதனைத் தனது நூலின் இலட்சியமாகக் கொண்டு,

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள ஆன்றதொல்பதி, ஆருயிர்த் தொகை
வான்திகழ்தளை"

என்று குறிப்பிட்டது. பதி என்னும் தருமத்தை ஆருயிர்கள் மறந்து வாழ்ந்து அழிந்தமைக்குத் "தளை" எனப்படும் தன்னலம் கருதும் பாசமும், அஞ்ஞானமுமே காரணம் எனச் சித்தாந்தம் விளக்கியது. "நல்லோரை, தருமத்தைக் காப்பதற்கு உலகிலே அவதரிப்பேன்" எனக் கீதையில் கிருஷ்ணபகவான் கூறினார். அதேபோலத் தேவர்கள் எனப்படும் நன்மைதரும் நலமுடையோரை உய்வடையச் செய்யும் பொருட்டு எம்பெருமான் ஆலத்தை உண்டு பிறர்க்கு அமுதத்தை அளித்த அறக்கடவுள் எனச் சங்கநூல்களும் பெரிதும் போற்றுகின்றன. "விடை" என்னும் தருமத்தை ஊர்தியாக உடையவன் எனத் தேவாரத் திருமுறைகளும் இறைவனை "விடையேறும் எங்கள் பெருமான்" எனப் பல இடங்களிற் சுட்டிக்காட்டின.

அறம் என்பது கடமை, தானம், கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியச்செயல் அறக்கடவுள், அறக்காடு (சுடுகாடு) எனப் பலபொருளில் வழங்குமெனக்கழகக் கையகராதி விரித்துரைக்கும்[6] கோயில்கள் அறநிலையங்களாகவும், தருமத்திற்கு விட்ட நிலங்கள் அறச்சலைகள், தருமசத்திரங்கள் ஆகவும் அறச்சோறு, அறக்கொடை எனப்பலவாறு அறமானது தமிழர் சமூகத்தில் பல்வேறு வழிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதனையும் இலக்கியங்களில் காணலாம். அதுமட்டுமன்றி மகவினைப் பெறுவித்தல், பிணம் சுடுதல், சுண்ணம், நோய்க்கு மருந்தளித்தல், சலவையாளி, நாவிதர்,கண்ணாடி, காதோலை, பெண்போகம், தண்ணீர்ப்பந்தல், மடம் அமைத்தல், ஆவீன்குற்றி, நந்தவனம் அமைத்தல், விலங்குகட்குணவிடுதல், கன்னிகாதானம், உயிர்காத்தல், கற்பித்தல், அனைத்துமே சீரிய வாழ்வியல் அறநெறிகளாகப் பேணப்பட்டன.[7] அதனால் சித்தாந்தத்தில் சிவனுக்கு "அறவன்" என்ற ஒரு பெயரும் கூறப்பட்டது. "அறவா நீ ஆடும்போது மகிழ்ந்து பாடி நான் உன்னடிக்கீழ் இருக்க" என்னும் காரைக்கால் அம்மையார் பாடல் அதற்கொரு உதாரணமாகும்.

சமயமானது அறத்தினைவிடக் கூடுலான கடமைகளை வற்புறுத்தும். இறைவனைத் துதித்தல், வணங்குதல், நோன்பிருத்தலும் சமயக் கடமைகளில் சிலவாயினும் உருவமற்ற ஆணைக்குப் பணிவதைவிட தன்னிடத்திலே நம்பிக்கை கொள்வதை வலியுறுத்துவதே அறம் என விமர்சிப்பது பொருத்தமெனலாம். இறைவனை ஆதாரமாகக் கொள்வது மதம் மனிதனை ஆதாரமாகக் கொள்வது அறம் எனக் கருதினும்[8] சித்தாந்தம் ஒரு படி மேற்சென்று இறைவனையே அறவடிவாகவும் உருவகித்திருப்பது அதன் அறநிலைப்பாடாகும். சைவசித்தாந்தம் கூறும் சிவஞானம் என்பது அறவியல் சார்ந்த வாழ்விலே மனிதன் தன்னிறைவு பெறுதலைச் சுட்டும். இதனைக்

"கல்லால நிழலின்கீழ் ................. .. . . நால்வர்க்கு அறமுரைத்த
பொல்லார் இணைமலர் போற்றித் தொழுவோம்"[9]

எனவும்

"பண்டு நால்வர்க்கு அறமுரைத்தருளிப்
பல் உலகினில் உயிர்வாழ்க்கை
கண்டநாதனார் கடலிடம் கைதொழ......................"[10]

எனவும் சித்தாந்த நூல்கள் தரும் செய்திகள் ஏராளம். "அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டி" என்றார் மணிவாசகர். இங்கு முன்னதில் அறம்-ஞானம் எனவும் பின்னதில் அறம்-புண்ணியம் எனவும் கூறப்பட்டது. "குறைவிலாதுயிர்கள் வாழ்க நான் மறை அறங்கள் ஓங்க" எனக் கந்தபுராணம் வாழ்த்துவதும் "வையகமும் துயர் தீர்கவே" எனச் சம்பந்தர் பிரார்த்தனையும் வாழ்வியலில் அறத்துறை சார்ந்த மனித நேயப்பண்புகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதா யமைந்தது.

தமிழ் இலக்கியங்களில் அறம் எனப்படுவது மேன்மைக்கொள் சைவநீதி எனத் தமிழ் நூல்களும் புராண நூல்களும் எடுத்து வினக்கின. *"வையத் தறம் பாவம் என்று அறிந்ததன்று இடார்க்கு வெறும்பானை பொங்குமோ மேல்"* என்றார் ஔவையார். *"அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாவது"* பற்றிச் சிலப்பதிகாரமும் பேசியது. *"நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே"* என ஏழைப் புலவன் தருமிக்காக வாதாடியதும் சைவநீதியைத் தருமம் அறிந்து போற்றுக என்பதற்காக இறைவன் ஆடிய ஒரு நாடகம் எனவும் கருதலாம். எனவே தனிதனிதனது நலன் பற்றிய சிந்தனையானது காலப்போக்கிலே விரிவடைந்து சமூக நலன்பற்றிய போக்காக மாறுவதற்குத் தனி அறவினைகள் வழிவகுக்கின்றதெனக் கருதலாம்."

சைவசித்தாந்த அறக்கொள்கையை இருவழிகளிற் பாகுபடுத்தமுடியும். ஒன்று கன்மக்கொள்கை வழியாக: மற்றது சைவசாதனைகளின் வழியாக: இவ்விரண்டு பாதைகளின் ஊடாகவுமே சித்தாந்த சமுதாய அறநெறிகள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. கன்மக் கொள்கையிலே ஊழ்வினைக்கோட்பாட்டினையும் நியதிக் கொள்கையினையும் கலந்து சித்தாந்த செய்திகள் சில முரணான விளக்கங்களைப் பிற்காலம் பெற்றதால் அவை "தலைவிதி" என்னும் மூடக்கொள்கையை கற்பிப்பதாக மாற்றமடைந்தன. அதனால் "அறநெறிக் காலத்தைப் போன்று நியதிக்கொள்கைக்கு சித்தாந்தத்தில் சரியான முக்கியத்துவம் கொடுபக்கப்படவில்லை எனவும் கருதப்பட்டது.[12] தலைவிதி வேறு நியதிக் கொள்கை வேறு. விதியை முயற்சியாலும் உழைப்பாலும் மாற்றமுடியும். ஆனால் நியதித் தத்துவம் அப்படிப்பட்டதன்று. பௌஷ்கராகமம், மிருகேந்திராகமம் முதலிய சிவாகமங்களில் கூறப்பட்ட "நியாமிகா" என்னும் படலம் இவ்வுண்மையினைப் புலப்படுத்தும். இக்கொள் கைக்கு சித்தாந்த அறிஞர்களால் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாமையே அதன் பிரதான குறைபாடாகும். இவ்வுண்மையை வெளிப்படுத்தச் சித்தாந்த சிந்தனையாளர்கள் முன்வருவது அவசியமாகும்.

அறநெறிகளை மக்கள் வாழ்வியல் நோக்கிலே பின்பற்றுவதற்காகவே சைவசித்தாந்த த்திலே தானம், தவம், கல்வி, தொண்டு, பணி, புண்ணியம், ஒழுக்கவியல், தண்டனை, நீதி எனப் பல்வேறு பகுதிகளாக வகுத்து சித்தாந்த நூல்களும் தேவாரத்திருமுறைகளும் அழகுற அறிவுறுத்தியிருக்கின்றன.

" ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம்
உறவுசீலம் வழக்கிலாத் தவம், தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத்துறவு அறிவொடு அர்ச்சித்தல் ஆதி இழுக்கிலா அறங்கள்... ."[13]

எனச் சித்தியார் அவற்றினை "உயிர்கள் வினைப்பயன்கள்" பற்றிய பகுதியிலே சிறப்புற வகைப்படுத்தியிருக்கின்றது. இவையே "இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை...." ஆனமையால் ஞானத்தால் அரனை அருச்சிப்பர்"[14] சிவஞானம் முணர்ந்தோர் என்பதில் ஞானம் என்பது அன்பு, அருள், கருணை, தியாகம் எனப் படுவதாகவும் அதனால் "சேவையே பூசை" என்பதனை உணர்த்தோர் எல்லாம் ஞானமாகிய அறிவினால் இறைவனை அர்ச்சிப்பதே "சிவஞானபோதம்" என்பதனை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். ஆதலால்

"சிவஞானச் செயலுடையோர் கையிற்றானம்
திலமனவே செய்திடினும் நிலைமலை போல் திகழும்....... . .
நவமாம் தத்துவ ஞானத்தை நல்கி
நாதனடிக் கமலங்களை நணுகுவிக்கும் தானே"[15]

என்ற சித்தியார் வாக்கும் இதனை மெய்ப்பிக்கும்.

தானம் என்று சைவசித்தாந்தம் ஈண்டு குறிப்பிட்ட பொருள் அறங்கள் யாவையும் குறிப்பதாகும் எனச் சிவஞான முனிவரும் குறிப் பிட்டுள்ளார்.[16] அறம் யாதென உணர வேண்டுமே தவிர வெறுமே அறிந்துரைப்பதனால் பயன் விளையும் மென்பதற்கில்லை. அறத்தை அறியமுயல்வதோ, ஆராயமுயல்வதோ பகுத்தறி விற்கும் அப்பாற்பட்ட சங்கதியாகும். அறத்தினை புத்தியால் அறிவது கடினம். பத்தி ஒன்றே அதனை அறிவிக்கும் சாதனமாகும். ஏனெனில் அறவினை என்பது பேசவேண்டிய செய்தியல்ல- செயலில் காட்டவேண்டிய, செய்விக்கவும் தூண் டும் ஆற்றலின்பாற் பட்டதாகும். அன்பில்லாத அறமானது பயன்தாரது. பாவத்தைச் சேர்க்கும் என்பதும் சித்தாந்த முடிபெனலாம்.

> "தரிப்பித்தலின் நீ தரும் தரிப்பித்திடாமை
> தெரிப்பிக்கும் அதர்மம் எனப் பெயர் செப்புமால் எம்
> பொருட்டுப் புரிபாவமும் புண்ணியமாக்கி எம்பால்
> விருப்பற்றவர் செய் அறமும் மறமாக்குவாம்"[17]

என காஞ்சிப்புராணம் இதனை எடுத்துக் காட்டியது.

> "தீயவை புரித்தா ரேனும் குமரவேள் திருமுனுற்றால்
> தூயவ ராகி மேலைத் தொல்கதி யடைவர்... . . . . . . .
> . . . . . . . . அடுசமர் அந்நாள்ச் செய்த
> மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள் பெற் றுயந்தான்"

என அதன் மேன்மையை கந்தபுராணமும் பேசியது.18

> "அன்பே அன்பாக அறிவழியும்- அன்பன்றித்
> தீர்த்தம், தியானம் சிவார்ச்சனைகள் செய்யும்
> அவை சாற்றும் பழம் அன்றே காண்"[19]

இவ்விதமாக "அன்பே சிவம்" எனச் சித்தாந்த நூலும் அன்பற்ற பூசைகள் இறைவனுக்கு உகந்தவை அல்ல எனச் சுட்டியது திரு மந்திரக் கருத்தும் இதனாற் புலப்படுத்தப் பட்டது. "யாவர்குமாம் இறைவற்கொரு பச்சிலை.... யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" எனவும் அறச்செயலே பூசையாகும் என்பதனைத் திருமூலர் உணர்த்தினார். அவ்வாறே நாவலர் பெருமான் அவர்களும் "பிடியரிசித் தானத்தின்" மூலமாக மக்களை ஊக்குவித்துச் சைவப் பாடசாலைகளை ஏற்படுத்தி அறிவுத் தானத்தை மேற்கொண்டமையும் சித்தாந்த வழிவந்த தார்மீகம் என்பது பலருமறிந்ததே. அதனால் "தருமமே போற் றிடின் அன்பு சார்ந்திடும்- அருள் எனும் குழவியும் அணையும்" என்ற கந்தபுராண அறிவுரையினால் அன்பாகிய சிவம் அறவினை ஆற்றுவோரிடத்து அருள் என்னும் குழந்தையினை மலர்விக்கும் எனக்கூறியதால் அறம் எனப்படு வதும் அன்பினில் விளையும் ஒரு அமுத வாழ்வெனவே சித்தாந்த வாழ்வியல் போதிக் கின்றது.

சித்தாந்த முதலான சிவத்திற்கும் அறத் திற்கும் சைவர்கள் வேறுபாடு காண்பதில்லை. சிவ புண்ணியங்கள் யாவும் தருமகாரியங்கள் எனப் போற் றுவது உண்மைச் சைவ நெறியாகும். பெரியபுராண வரலாற்றிலே கூறப்பட்ட தருமநெறிகள் பற்றி இன்று பலவிதமான ஐயப்பாடுகள் எழுப்பப்படுகின்றன. இறைவன் தன்னையே சரணடைந்து வாழும் மெய்யன்பு பூண்ட அடியவர்களை அளவுக்கதிகமாக வருத்தினார், சோதித்தார், துன்பங்களை விளை வித்தார் என்றெல்லாம் பல திரிபு வாதங்கள் எழுகின்றன. உதாரணத்திற்கு ஒன்றைப் பார்க்கலாம். சிறுத் தொண்டரிடம் இறைவன் பிள்ளைக்கறி கேட்டார். தன்னைச் சரணடைந்த ஓர் அடியவரை சிவன் இவ்வாறு வருத்தலாமா என்பது ஓர் சந்தேகம். சிவமும் தருமமும் வேறல்ல என்பதே சைவசித்தாந்த நிலைப்பாடென் பதனை உணர்ந்து கொண்டால் இத்தகைய ஐயப்பாடுகள் எளிதில் அகன்றுவிடும். சிறுத் தொண்டரென்னும் அடியவர் முன்னாளில் பல்லவ மன்னர் 1ம் நரசிம்மரது படைத்தளபதியாக விருந்த பரஞ்சோதி என்பவராவர்.[20] படைத்தளபதியாக இருந்து போரை நடத்திய அவரனாலும் அவரது தூண்டுதலாலும் அரசவிஸ் தரிப்பிற்காக பலர் படுகொலைக்கு ஆளானார்கள். அரச தர்மத்திற்காக நடந்த கொலைகளிலும் சாதாரண மக்களும் பாதிக்கப்படுவது இயல் பேயானாலும் தவறு செய்தவர்களைத் தருமம் தவறு விடுவதில்லை. "தெய்வம் நின்று கொல்லும்" என்னும் தெய்வநீதி-சைவநீதி அது என்பதற்கு பரம்சோதி யாரின் பிற்கால வாழ்வு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

உயிர்க் கொலைகளின் தீமையை வன் முறைகளின் அழிவைப் பரம்சோதியார்க்கு உணர்த்தவே சிவன் அப்படியொரு நாடகம் ஆடினார் என்பதே அதன் தாற்பரியமானது. "எத்தனை கொலைகளைச் செய்ய உடந்தையாக இருந்தவர்க்குத் தனது குழந்தையை அப்படிக் கொலைசெய்ய முடியுமா? அப்படிக் கொல்லும் போதுதான் கொலையுண்ட பிள்ளைகளது பெற்றோர் துயரமும் அவருக்குப் புரியும் என்பதை உணர்த்தவே இறைவன் அவரிடம் பிள்ளைக் கறி கேட்ட வரலாறு உணர்த்தி நிற்கின்றதென லாம். இவ்வாறாக ஒவ்வோர் அடியவர் வாழ்வின் பின்னணியில் ஒவ்வோர் தர்மம் விளக்கப படுகின்றது.

ஆயினும் பெரியபுராணத்தில் வரும் சம்பவங்கள் எதைச் செய்தாலும் அன்புடன் செய்து வந்தால் அதனையும் ஈசனார் அறச் செயலாக ஏற்றுக் கொள்வார் என்றதோர் நியதியும் "கொடிய பக்தி" என்ற போர்வை யிலேயே காணப்படுகின்றது. இதனை "வன்பக்தி" என்றுகூட நவீன மானிடவியல் கருதும். ஆயினும் அன்பினால் ஆற்றப்பட்ட செயல்கள் ஈசனுக்கு இதமாகவே இருந்ததை "தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும்..... பாதகத்திற்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்ற [illegible] பாடல் எடுத்துக்காட்டும். "எல்லாம் எமையாளும் ஈசன் செயல்" என்னும் மனோபாவமும் பலன் கருதாது செயலாற்றும் பக்குவமும் அடைந்து விட்டால். கொடிய செயலும் இதமாகமாறும். தேவர் கட்கு இதமாக யாகம் செய்த த்க்கன் "ஈசனை மதியாமை" என்னும் ஆணவச் செருக்கால் அது அவனுக்கே விரோதமாக முடிந்தது. ஏனைய மனையறங்களிலும் கல்லால் எறிந்தர்ச்சனை செய்த சாக்கியர், உமிழ்நீரால் அபிஷேகித்த கண்ணப்பர், மூக்கைச் சுட்ட தீபத்தைத் தூண்டி அது திருவிளக் கேற்றியதாகக் கொண்டு மாபலியாய் பிறந்த எலி, யானைக்கும் சிலந்திக்கும் முத்தியருளிய வரலாறு, யாவும் பக்தி பாவனையுடன் அனைத்து ஜீவராசி களும் அன்பினால் ஆற்றிய எச்செயலும் இறைவனால் பரிசுத்தமானதாக ஏற்கப்பட்ட அறச் செயலாகவே காணப்படுகின்றனவாகும்.

இதனை

> "அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்
> அரனடிக் கன்பி லார்செய் புண்ணியம் பாவ மாகும்
> வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
> நரனிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே"

என்று சிவஞானசித்தியாரும் புலப்படுத்தியதி லிருந்து "நான் எனது" என்ற ஆணவமொழிந்தார் செயல்கள் உலகியலில் பிறர்க்கு நன்மை பயப்பதாயின் அதுவும் அரன்செயல்-அறச்செய லாகக் கணிக்கப் பட்டது. "நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்னும் திருவாசகத் தொடரின் உட்பொருளும் அதுவாகவேயுள்ளது.

சைவசித்தாந்தம் அறவியலையும் சமூகவியலையும் பிரித்துப் பார்ப்பதாகக் கருதுவது கடினம். சமூகவியலை அடிப்படை யாகக் கொண்டு எழுச்சி பெறுவதே அறவிய லாகும். இன்றைய அறவியல் சமூகவியல் என்பன விளக்க விஞ்ஞானத்தை (Discriptive Science) அடிப்படையாகக் கொண்டவை. அறவியலை நேர்நிலை விஞ்ஞானம் அல்லது அற வொழுக்க விஞ்ஞானம் (Possitive Science of Moral) எனவும் வியாக்கியானம் செய்யப்படும். இதனையே அறவிஞ்ஞானம் எனவும் விளக்குவர்.(Possitive Science of Ethics).[21] அறத்தை அறிவியலில் இருந்து ஒதுக்கிவிட்டு உழைப்பிற்கும், தற்செருக்கையும் ஆடம்பரத்தையும் வளர்க்கும் கல்வியறிவே இன்றைய கல்வித் திட்டத்தின் பெறுபேறாக ஆனதோ என்ற மயக்கமும் ஏற்படாமல் இல்லை. ஆன்ம நேயத்தை-அறத்தை-பண்பாட்டை நேசிக்கத் தெரியாத வகையில் கல்விமுறை மாறுமெனில் மனிதநேயம் என்னும் அறப்பண்பு வீழ்ச்சியடைவதில் சந்தேகமில்லை.

அறவியலும் ஒரு விஞ்ஞானவியலாக வளர்ந்து வரும் தற்காலத்திலே பெயர்ச்சொல்லை மாற்றி மாற்றி உபயோகித்தாலும் அதன் உட்பொருளை மாற்றுவதாக அர்த்தமாகாது. மாற்றம் என்பது அறிவு குறைந்த சடப்பொருட் கட்கு-புறப்பொருட்கட்கு நிர்ணயிக்கப்பட்ட ஒன்றே தவிர அக வளர்ச்சியில் ஆன்மிக ஞானத்திலே-அன்பிலே- அறச்செயலின் முழுமையிலே காலப்போக்கில் அனைத்தும் ஐக்கியமாகி விடுகின்றன என்பதே சித்தாந்த சமூக அறநிலைப்பாடாகும்.

#### அடிக்குறிப்புக்கள்

1) அறவியல் ஓர் அறிமுகம், லில்லிவில்லியம், 1964, முன்னுரை, ப.vi
2) பகவத்கீதை, 13.7.
3) சிவஞானசித்தியார் 8.2.275.
4) மேற்படி 8.2.279
5) மேற்படி பாடலைப் பார்க்க
6) கழகத் தமிழ் கையகராதி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1968, பக்.28. (உ_எ)
7. மேற்படி. பக் 305.
8. Relation of Morality to Religion iii, vol xxi ,p.85-90.
9. சிவஞான போதச் சிற்றுரை, கடவுள் வணக்கம்.
10. சுந்தரர் 7ம் திருமுறை திருக்கேதீச்சரப் பதிகம்
11. J.C.Flugel, Men Morals and Socity, The Psycology of Moral Progress,Chap. i, ii
12. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஆ.வேலுப்பிள்ளை, ப.170.
13. சிவஞானசித்தியார், 2.2.115.
14. மேற்படி, 8.2.275.
15. மேற்படி 8.2.278.
16. சிவஞானமாபாடியம், சிவஞானமுனிவர் "இருவினையொப்பு" என்ற பகுதி பார்க்க.
17. காஞ்சிப்புராணம், தழுவக்குழைந்த படலம், பாடல் 77.
18. கந்தபுராணம், சூரபன்மன் வதைப்படலம், பாடல் 496.
19. திருக்களிற்றுப்படியார், பாடல் 55.
20. பல்லவ வரலாறு, இராசமாணிக்கனார், பார்க்க.
21. (An Intruduction to Ethics) அறவியல் ஓர் அறிமுகம், வில்லியம் லில்லி, தமிழில் கோ.மோ.காந்தி, தமிழ் வெளியீட்டுக்கழகம், 1964.

## விரதம் அநுட்டிப்பவர் செய்யவேண்டியவை

காமங் கோபம் முதலிய குற்றங்க ளெல்லா வற்றையும் பற்றறக் களைதல் வேண்டும். தவறாது வைகறையிலே நித்திரைவிட்டெழுந்துவிடல் வேண்டும். புண்ணியதீர்த்தத்தை அடைந்து, விபூதி, வில்வத்தடி மண், தருப்பை, கோமயம், திலம் என்பவைகளைச் சிரசிலே வைத்துக்,கையிலே பவித்திரஞ் சேர்த்துச், சங்கற்பஞ் சொல்லி, ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

தியானஞ், செபம், பூசை, ஆலயதரிசனம், பிரதக்ஷிணம், புராண சிரவணம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும். அபிஷேகத் திரவிய நைவேந்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். போசனம் பண்ணுமிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும். நித்திரை செய்யுமிடத்து, இரவிலே, கோமயத்தினாலே மெழுகப்பட்ட தரையிலே தருப்பையின் மேலே, கடவுளைச் சிந்தித்துக் கொண்டு, அதிசுத்தராய் நித்திரை செய்து, வைகறையில் எழுந்துவிடல் வேண்டும். உபவாச விரத' தினத்துக்கு முதற்றினத்திலே ஒருபொழுது அபராணத்திலே போசனஞ் செய்தல் வேண்டும். உபவாச விரத தினத்துக்கு மற்றைநாட் காலையிலே நித்தியகருமம் இரண்டும் முடித்துக்கொண்டு, மாகேசுர பூசை செய்து, ஆறு நாழிகை யுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணிய பின், பகலிலே நித்திரை செய்யாது, சிவபுராணங் களைக் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். நித்திரை செய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரண மின்றிக் கொன்ற மகாபாதகத்தை அடைவர். (பாரணம் = உபவாசத்துக்குப் பின் செய்யும் போசனம்.)

*-சைவவினாவிடை*

# ஆலயங்கள் யாருக்காக?

முருக வே. பரமநாதன்

மனிதனில் மறைந்திருக்கும் தெய்வீகசக்தியை வளர்த்து, ஆன்மீக வாழ்வை அரும்பச் செய்யும் மத்திய நிலையங்களே ஆலயங்கள். இவை இறை இல்லங்கள், வணக்க ஸ்தலங்கள் சமுதாய சேவையின் மையக் கவர்ச்சிப் புள்ளிகள். எல்லா மதங்கட்கும் வழிபாட்டு நிலையங்கள் உண்டு, அவை வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. எமது சைவ நெறியில் அதற்கு ஆலயம், கோயில், தளி, சினகரம், சேத்திரம் என்றெல்லாம் திருநாமம் உண்டு, எங்கெங்கே மக்கள் குடியேறினார்களோ அங்கெல்லாம் கோயில்களை அமைத்து வழிபாடியற்றினர். வாழ்நாள் முழுதும் உழைக்கும் மனித குலத்துக்கு ஆறுதலும், அமைதியும், சாந்தியும் சமாதானமும், மகிழ்வும் நிறைவும் அளிக்கும் புனித இடமே ஆலயங்கள். பொதுவாழ்வுக்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் கோயில்களே கலங்கரை விளக்கங்கள், மூலபண்டாரங்கள். இவை மக்களுக்காக மக்களால் அமைக்கப்பட்டவை.

மன்னர்கள், மாமன்னர்கள், சிற்றரசர்கள், ஞானிகள், தீர்க்க தரிசிகள், சித்தர்கள், மறையவர், உழைப்பாளிகள், துறவிகள், தபோதனர் போன்ற பலரும் இப் பெரும் பணியில் ஈடுபட்டுச் சமயப்பணியும், சமுதாயப்பணியும் ஆற்றினர். இத்தேவகைங்கரியம் பொதுமக்களை நல்வழிப்படுத்தி வாழவைத்தது, இக்குறிக்கோளை அடைய ஒவ்வொருவரும் தம்பங்களிப்பைச் செய்தனர். சுயநலமற்ற பொது நலமும், பரநலமும் கட்டிப்பேசப்பட்டன. மன்னர்கள், வளம் படைத்தோர் வேண்டிய நிபந்தங்கள் நன்கொடைகள், நடைமுறைப் பாரம்பரியங்கள், அறக்கட்டளைகளை நிறுவி ஆலயம் சிறப்பாய் இயங்க ஆவன செய்தனர். அதுவழிபாட்டு நிலையம் மட்டுமல்ல. மக்களின் நலன்களைப் பேணிப்பாது காக்கும் சேவையின் மைய நிலையங்களாக மிளிர வேண்டுமெனவும் எண்ணிப் பாரிய திட்ட ஒழுங்கு களையும் மேற்கொண்டனர். பரம்பரை பரம்பரையாய், வளர்ந்து வரும் இளஞ்சமுதாயத்தின் பொது நல மேம்பாடு, சமய உணர்வுடன் வளர வேண்டுமென்ற சிந்தனையோட்டத்திற் பல நிறுவனங்கள் செய்ய வேண்டிய சேவைகளை ஆலயங்களே கடமை உணர்வுடன் பொறுப்பேற்று மேற்கொண்டன. இவ் விறைபணியைச் செய்யத் தனி நபரோ, குழுவினரோ, சபையோ தன்னல மறுப்புடன் சேவை யாற்றினர். இச்சூழ் நிலையிற் கல்வி, பண்பாடு, கலாசாரம், நாகரிகம், இசை, வேதம், நடனம், நீதி நெறி, அறக்கட்டளை, நீதித் தீர்ப்பு, நீதி, அன்னதானம், நூலகம், போன்ற பல்முகப்படுத்தப்பட்ட சேவைகள் அன்று ஆலயங்களிலே பக்கச் சார்பின்றி அமுல் நடத்தப்பட்டன. மக்களுக்காகவே ஆலயங்கள் என்ற அடிப்படை அன்று அடிநாதமாயிற்று. கோயிலுக்காக மக்கள் அல்ல; இன்று இந்நிலை மாறிவிட்டமையால் மக்களின் வாழ்வியல் திசைமாறிப்போன நிலைதான்.

இன்றைய ஆலயங்கள் விழாக்களையும், சடங்குகளையும், வருமானத்தையும் மையமாகக் கொண்டே இயங்குகின்றன. இவ்வணிக நோக்கு மாறி "எம்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கருது கோளுடன் கோயில்கள் பொதுப்பணி மன்றங்களாகச் சேவையாற்றவும் முன்வரவேண்டும். உயர்ந்த கோபுரங் களின் நிழலில் தாழ்ந்த எண்ணங்கள் ஆலயங்களைக் கறைபடுத்தக்கூடாது. புனித ஆலயங் களின் தூய்மை ஒவ்வொரு செயலிலும் தொனிக்க வேண்டும். வணக்கத்துக்காகப் போகும் சேவார்த்திகளின், அடியார்களின், பக்தர்களின் மனம் புண்படாமல் ஆலய சேவையமைய வேண்டும் குளிக்கப் போய்ச் சேறு பூசும் சூழ்நிலைகளினின்றும் ஆலயம் தன்னை நீக்கிப் புனித ஷேத்திரமாய்த் திகழவும் வேண்டும். விழாக்கள், உற்சவங்கள், விரதங்கள், திருப்பணிகள், பூசைகள், அர்ச்சனைகள், அபிஷேகங்கள், மட்டும் கோவிலின் அங்கங்கள் அல்ல; மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை என்ற புனித கோட்பாடு அங்கே வெளிப்பட வேண்டும். சமயக்கல்வி, பண்ணிசை, வேத பாராயணம், இன்றைய சமகாலக் கல்வி சமயதத்துவக்கல்வி ஒழுக்கம், நடைமுறைவாழ்வியல் அங்கே கற்பிக்கப்படல் நன்று. எந்த ஏழையும் அர்ச்சனை செய்யும் வாய்ப்பு வசதியை ஆக்க வேண்டும். ஏழைகளின் திருமணம் அநாதைகள் பராமரிப்பு, கைமை பேணல் முதியோர்கல்வி, வைத்திய சேவை, உயர் படிப்பு போன்ற பல துறைகளில் சிலவற்றையேனும் மேற்கொண்டு சேவை செய்ய என்று ஆலயங்கள் முன்வருகின்றனவோ அன்றே அவை புனித பூமிகளாக மிளிரும். நாட்டில் ஏற்படும் கஷ்டங்கட்குக் கோயிலின் நடைமுறைச் சீர்கேடுகளும் அடிப்படை ஆகும். நமது நாட்டிற் சில ஆலயங்களின் தொண்டு போற்றப் படக்கூடியதாய் இருக்கின்றது, இவற்றை அடியொற்றி மற்றவையும் இயங்கின் நாடும் மக்களும் உய்தி பெறுவர்.

# திருவாசகம் — நூலமைப்பு

பண்டிதர். சி. அப்புத்துரை.

ஓதற்கெளிதாய் உணர்தற்கரிதாயமைந்த திருவாசகத் திருப்பாடல்களை ஓதுதலும், உணர முயலுதலும் நம் நாளாந்த கடமைகளுள் ஒன்றாதல் வேண்டும். காலை அல்லது மாலை, ஒவ்வொருநாளும், நாம் செய்யவேண்டிய செயல்களுக்காக ஒதுக்கும் நேரத்திடை திருவாசகம் ஓதுவதற்கெனவும் சில நிமிடங்களை வைத்துக்கொள்ள வேண்டும். அந்த ஒரு சிறு பொழுதையாவது நாளும் பயனுடையதாகக் காணவேண்டும். கருங்கல் மனத்தையும் பக்குவப் படுத்தவல்ல அறுநூற்றைம்பத்தாறு திருப்பாடல் களை அந்நூல் கொண்டுளது. அவை ஐம்பத்தொரு பகுதிகளுள் அடங்குகின்றன. அந்த ஐம்பத்தொரு பகுதிகளும் ஐம்பத்தொரு பதிகங்கள் என்று பேசப்படுகின்றன.

"பதிகம் என்பது சிறு நூல்வகையைச் சேர்ந்தது. நான்கடி முதல் எட்டடிவரையிலான வெண்பாவை முன் வைத்து ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம் ஆகிய செய்யுட்களால், பத்துப் பாட்டுக்களாலாயினும், இருபது பாட்டுக்களாயினும் பாடுவது"[1] என்று கலைகளஞ்சியம் தொகுதி ஆறிலும், பன்னிருபாட்டியல் இனவியல் பகுதிலும் காணப்படுகின்றது. "பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது"[2] என்று திருவாசகம்-ஆராய்ச்சிக் குறிப்புகள் என்னும் நூலில் மு. அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். "சிவபுராணம் முதலிய நான்கு திருப்பாட்டுக்களை யும், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலிய பத்துக்கு மேற்பட்ட பல திருப்பாட்டுக்களை யுடைய பகுதிகளையும் தனித்தனியே பதிகம் என்று கூறுதல் முன்னையோர் வழக்கு"[3] என்பர் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்கள். "இந்தியாவிற் பலர் இப்பொழுதும் பத்தும் பதிகம் என்கின்றனர். இதனால் அவற்றின் பொருளொருமை புலப்படும். பத்தோ பதிகமோ இருபது கொண்டவற்றிற்கு ஏலாதன்றோ? எல்லாம் திருப்பத்து எனலாகாது"[4] என்பர் முத்து சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள்.

95 அடிகளையுடைய சிவபுராணம், 146அடிகளையுடைய கீர்த்தித் திருவகவல், 182அடிகளையுடைய திருவண்டப்பகுதி, 225அடிகளையுடைய போற்றித்திருவகவல் என்னும் நான்கு நெடும்பாடல்கள் திருவாசக முதல் நான்கு திருப்பதிகங்களாக அமைந்துள்ளன. அடுத்துள்ள திருச்சதகம் நூறு திருப்பாடல்களையும், நீத்தல் விண்ணப்பம் ஐம்பது திருப்படல்களையும் கொண்டவை. தொடர்ந்து வரும் திருவெம்பாவை, திருவம் மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல் ஆய ஆறு பதிகங்களும் தனித்தனி இருபது திருப்பாடல் களை உள்ளடக்கியவை. திருப்பூவல்லி, திருவுந்தியார் என்னும் இரு பதிகங்களும் தனித்தனி பத்தொன்பது பாடல்களையும், திருத்தெள்ளேணம் பதினான்கு திருப்பாடல்களை யும், பிரார்த்தனைப்பத்து, திருவெண்பா என்னும் பகுதிகள் தனித்தனி பதினொரு திருப்பாடல்களை யும் உடையவை. அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், திருப்பள்ளியெழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப் பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, கண்டபத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, அச்சப்பத்து, திருப்பாண்டிப் பதிகம், பிடித்தபத்து, திருவேசறவு, குலாப்பத்து, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, யாத்திரைப்பத்து, ஆய இருபத்தைந்து பதிகங்கள் தனித்தனி பத்துத்திருப்பாடல்களை உடையவை. திருப்பொன்னூசல், அச்சோப்பதிகம் என்பன தனித்தனி ஒன்பது திருப்பாடல்களையும், திருபடையாட்சி எட்டுத் திருப்பாடல்களையும், திருக்கழுக்குன்றப்பதிகம், பண்டாய நான்மறை, ஆனந்தமாலை என்னும் பதிங்கள் தனித்தனி ஏழு திருப்பாடல்களையும், எண்ணப்பதிகம் ஆறு திருப்பாடல்களையும், திருப்புலம்பல் மூன்று திருப்பாடல்களையும் திருப்படையெழுச்சி இரண்டு திருப்பாடல்களையும் உடையவை.

இ஡்திவ்வாறாக, திருப்பதிகங்களின் பெயரும் தொகையும் என்னுந் தலைப்பிலமைந்த மூன்று பாடல்கள் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை உரையுடன் கூடிய பதிபிபிற் காணப்படுகின்றன.[5] அங்கே,

"..............................................................

"பொருவரிய திருச்சாழல் பூவல்லி யுந்தி யிவையிருபதாம்"

என்றமைந்த பாடலிலுள்ளபடி திருப்பூவல்லி திருவுந்தியார் என்னும் இருபதிகங்களிலும்

தனித்தனி இருபது திருப்பாடல்கள் பதிவாகியுள்ளன. திருவாசகப் பதிகத் தொகை என்னுந் தலைப்பிலமைந்த மூன்று பாடல்கள் பண்டிதமணி திரு. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களின் திருவாசக ஆராய்ச்சிப் பேருரையுடன் கூடிய பதிப்பிற் காணப்படுகின்றன.[6] அங்கே

"புவனமகிழ் தெள்ளேணஞ் சாழலிரு பஃதாம் பூவல்லி திருவுந்தி பத்தோன்ப தாகும்"

என்று அமைந்துள்ளது, ஆனாற் பதிகங்கள், திருப்பூவல்லி, திருவுந்தியார் இரண்டிலும் தனித்தனி இருபது பாடல்கள் பதிவாகியுள்ளன. திருவுந்தியார் பற்றியெழுதிய விளக்கத்திடை, "தங்குறை காணாராய்த் திரியும் முனிவர் போல அமைந்தேனில்லை எனவும் எண்ணிய பெரு நாணாற் பாடப்பட்டது. "ஏகாசமிட்டு" என்னுந் திருப்பாட்டாதலாலும், அத்திருப்பாட்டின்றேல் இப்பகுதிப் பொருள் நிறைவேறாது வற்றும் ஆதலாலும் பல ஏட்டுப்பிரதிகளிற் கொள்ளப்படாததாக இருப்பதையும் பொருட்படுத்தாது இப்பகுதியில் இயைத்துக் கொண்டாமென்க"[7] என்று பாரதியார் குறிப்பிடுகின்றார். ஜி. வரதராஜன் அவர்கள் எழுதிய திருவாசகம் விரிவுரை என்னும் நூலில், குறிப்பிட்ட இருபதிகங்கள் திருப்பூவல்லி திருவுந்தியார் இரண்டிலும் தனித்தனி இருபது பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கான உரையின் இருபதாவது பாடல் இறுதியில் "பழைய உரைப்பதிப்புக்களில் இப்பாடல் இல்லை"[8] என்று இரண்டிடத்துங் காணமுடிகின்றது.

திருவாசகம்- ஆராய்ச்சிக் குறிப்புகள் என்னும் நூல் ஆசிரியர் மு. அருணாசலம் அவர்கள் தாமெழுதிய நூலின் மிகைப்பாடல்கள் என்னும் அத்தியாயத்தில் மேலே காட்டப்பட்ட திருப்பூவல்லி, திருவுந்தியார் என்ற இரு பதிகங்களிலும் இருபதாவதாக இடம் பெறும் இரு பாடல்கள் பற்றியும் எழுதியுள்ளார்கள்.[9] அவை சில எட்டுப் பிரதிகளிற் காப்படுவதாகவும், பல புத்தகங்கள் அவ்விரண்டையும் அச்சிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே "மாவார வேறி" எனத்தொடங்கும் திருப்பூவல்லி எனும் பதிக இருபதாவது பாடலும், "ஏகாச மிட்ட" எனத்தொடங்கும் திருவுந்தியார் எனும் பதிக இருபதாவது பாடலும் திருவாசகத் திருப்பாடல்கள்தாமா என்று திருவாசகத் திருப்பாடல் நெறி நிற்போர் கண்டுகொள்வார்களாக.

இனி, இத்திருவாசகத் திருப்பாடல்களுள், திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, யாத்திரைப்பத்து, பண்டாய நான்மறை என்னுந் திருப்பதிகங்களிலுள்ள திருப்பாடல்கள் அந்தாதித் தொடையாக அமைந்து, எமது ஞாபகத் திறனுக்கு அனுகூலமாவதைக் காணுகின்றோம்.

திருவாசகப் பதிகங்களிலுள்ள திருப்பாடல்கள் ஒவ்வொன்றும் பாவினாலோ பாவினத்தினாலோ ஆனவை. ஒவ்வொரு பதிகத்தும் இடம் பெறும் திருப்பாடல் எந்தவகையைச் சார்ந்தவை யென அப்பதிகத் தொடக்கத்திற் குறிக்கப்பட்டுளது. கோயில்மூத்த திருப்பதிகம் என்னுந் தலைப்பிலமைந்த பகுதியிலுள்ள திருப்பாடல்கள் அறுசீர்கழிநெடிலடி யாசிரிய விருத்தம் என்று பதிக ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ளது. இடையே "முழுமுத லேயைம் புலனுக்கும்......." என்று தொடங்கும் திருப்பாடல் கட்டளைக் கலித்துறை என்னும் இனத்தைச் சார்ந்ததாகக் காணப்படுகின்றதெனினும் பின்னிரண்டடியும் செம்மையனவாக அமையவில்லை. இச்செய்தியை 1960 இல் சித்தாந்த இரத்திநாகரம் முத்து சு. மாணிக்க வாசக முதலியார் அவர்கள் எழுதியுள்ளார்கள்[10]. ஏடெழுதியவர்கள் செய்த இம்மாற்றங்கள் எம் சிந்தனைக்குரியனவாகுக.

"நமசிவாய வாழ்அக"


**அடிக்குறிப்புகள்**:

1. கலைக்களஞ்சியம்- ஆறாந்தொகுதி வெண்பாப்பட்டியல்- இனவியல்- பக்கம்: 167,
2. திருவாசகம்- ஆராய்ச்சிக்குறிப்புகள்- மு.அருணாசலம் முதற்பதிப்பு 1965. பக்கம் 132.
3. திருவாசகம்- திருச்சதகம்- கதிர்மணிவிளக்கம்- இரண்டாம்பதிப்பு 1965. பக்கம் 18.
4. மாணிக்கவாசகர் விழாமலர், மணிவாசகர் சபை, காரைநகர், யாழ்ப்பாணம்-வெளியீடு 1960. பக்கம்:1
5. திருவாசகம்மூலம் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை உரையும், B. இரத்தினநாயகர் ஸன்ஸ் அவர்களாற் பதிப்பிக்கப் பெற்றது. பக்கம்:24.
6. திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை- பண்டிதமணி க. சு. நவநீதகிருஸ்ணபாரதியார். பத்மாபதிப்பகம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1954, பக்கம் XXV.
7. ஆறாம் இலக்க நூல்- பக்கம்: 674.
8. திருவாசகம் விரிவுரை. ஜி. வரதராஜன். பழனியப்ப பிரதர்ஸ் பதிப்பு. 1987. பக்கம் 345, 354.
9. இரண்டாம் இலக்கநூல் பக்கம் 169.
10. நாலாம் இலக்க நூல். பக்கம். 5.

# ஞானப்பால் பருகித்தேவாரம் பாடியது

செயா

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் தந்தையார் பெயர் சிவபாதவிருதயர். தாயார் பெயர் பகவதியார். தந்தையார் ஒருநாள் ஆலய வழிபாட்டுக்குப் புறப்பட்டார். அப்போது திருஞான சம்பந்தருக்கு மூன்று வயது. பிள்ளையும் தந்தையாருடன் செல்லவிரும்பியது. எங்கு பெற்றார் சென்றாலும் பிள்ளைகள் அவர்களோடு செல்ல விரும்புவது வழக்கம் அல்லவா? சிவபாதவிருதயரும் பிள்ளையைக் கூடவே அழைத்துச் சென்றார். ஆலய தரிசனம் செய்வதற்கு முன்னர் ஆலயப்பக்கலில் உள்ள திருக்குளத்தில் நீராடி, அநுட்டானம் முடித்துச் செல்லுதல் வழக்கம். பிள்ளையைத் திருக் குளத்தின்படியில் இருக்க வைத்தார். தான் நீராடத் திருக் குளத்தில் இறங்கினார்.



பண்டையகாலத்தில் பெரியவர்கள் நீர்நிலை களில் நீராடுதல் ஒரு ஒழுங்குமுறை பற்றிய தாக இருந்தது. இக் காலத்தைப்போல நீந்து தல், சுழியோடுதல் முதலாம் நீர்குடைந்தாடும் வழக்கம் பெரியோர்களிடம் இல்லை. அவர்கள் சூரியன் நிற்கும் திசையை நோக்கிச் சூரிய நமஸ்காரம் முதலில் செய்வார்கள். பின்னர் நீராடுதற்கு உரிய மந்திரத்தைச் செபித்துக் கொண்டு காதுத் துவாரங்களையும் மூக்குத்துவாரங்களையும் இருகைகளாலும் அடைத்துக் கொண்டு நீரில் அமிழ்ந்தி எழும்புவார்கள். இங்ஙனமாகச் சிவபாதவிருதயர் நீரில் அமிழ்ந்து எழும்புவாராயினர்.

தந்தையாரைக் காணாது பிள்ளையார் திகைத்தார். பதைபதைத்தார். அச்சத்தால் அழத் தொடங்கினார். எங்கும் எவரையும் காணமுடிய வில்லை. தந்தையாரும் இன்னமும் நீரில் அமிழ்ந்து எழும்பவில்லை. தனிமையால் தனயன் பயங்கொண்டு மேலும் பலமாக அழத்தொடங் கினான். யாரும் துணைக்கு வந்தபாடில்லை. தந்தையார் நீரில் அமிழ்ந்து ஸ்நானம் செய்து கொண்டிருந்த தால் அவருக்கும் பிள்ளையின் அழுகைச் சத்தம் கேட்கவில்லை. பிள்ளையார் கருவிலே திருவுடையவராக இருந் தமையால் அவருக்கு ஞானசம்பந்தம் இருந்தி ருக்கிறது. அது இங்கு கைகூட அழுகை வாய்ப் பளித்துவிட்டது. பிள்ளை யாரின் அழுகைச் சத்தம் உலக அம்மை அப்ப ரின் திருச்செவிகளிற் பட்டது. உலக உயிர்க ளிடத்துக் கருணைத் திருவுள்ளங் கொண்ட வர்கள் அவர்கள். எல்லாம் அறிபவர்கள். எல்லாம் வல்லவர்கள். உடனே எம்பிரானும் எம்பிராட்டியும் பிள்ளையார் இருக்கும் இடத்துக்கே ஓடோடி வந்து விட்டார்கள். "பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற் கடல் ஈந்தபிரான்" அல்லவா, எங்கள் கடவுள். பிள்ளையின் சத்தங் கேட்டால் தாய் தரிப்பாளா? இருவரும் எழுந்தருளி வந்து விட்டனர்.

"அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்பது உலக வழக்கு. இங்கு பிள்ளையார் அழுதார் உண்ணாமுலை அம்மையார் பொற்கிண்ணத்தில் அருளோடு பால் சுரந்து பிள்ளையாருக்கு ஊட்டினார். வழங்கிய பால் சிவஞானப்பால். பிள்ளையாருக்கு ஞானசம்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பிள்ளைக்கும் அழுகை நின்றுவிட்டது. வந்தவர்கள் எங்கள் தேவை அறிந்து வருவார்கள், போவார்கள், இவர்களின் கருணைக்கு அளவேயில்லை. வந்த கருமம் முடிந்தது, மறைந்துவிட்டார்கள். பிள்ளை சிவஞானப்பொலிவோடு நின்றது. இந்நிலையில் நீராடல் முடிந்து நீரினின்று எழுந்த சிவபாத விருதையர் பிள்ளை இருந்த இடத்துக்கு வந்தார். பிள்ளையாரின் திருக்கோலத்தைக் கண்டு அதிசயித்தார். ஆவேசமுங் கொண்டார். பிள்ளையை அதட்டி வினவத் தொடங்கினார்.

சிறுவர்கள் பால் குடித்தால் எங்கும் பால் சிந்தப்பட்டுச் சிதறி இருக்கும். வாய் பாலறா வாயாக இருக்கும். பிள்ளை மூன்று வயதுப் பாலகன். பால் குடித்தப் பிள்ளை எப்படி நிற்கும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். பால் அவரது வாய்ப்பகுதியில் சிந்திக் காணப்பட்டது. அதனைப் பார்த்த தந்தை, "உனக்கு பால் பருகத் தந்தது யார்?" என்று பிள்ளையை அதட்டிக் கேட்டார். இவர்கள் அந்தணர்கள். தம் குலத்த வரிடமன்றி வேறு எவரிடமும் எதையும் வாங்கி புசிக்க மாட்டார்கள். தங்கள் குலத்திற்கு இழுக்கு வந்துவிட்டதே என்று சிவபாதவிருதையர் வருந்தினார்.

பால் வாங்கிப் பருகியது உலக பிதாமாதாக்களிடத்தில், அவர்கள் சாதி சமயங் கடந்தவர்கள், உலக ஜீவராசிகள் அவர்களின் பிள்ளைகள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உண்மையை உலகுக்கு உணர்த்து பவர்கள். அவர்கள் வழங்கிய பால் பிள்ளையாருக்கு ஞான சம்பந்தத்தை உண்டாக்கியது. பிள்ளையார் "ஞானசம்பந்தர்" ஆனார். பிள்ளையார் தந்தையாருக்கு பாட்டிலேயே விடை பகருகிறார். குடித்தது ஞானப்பால் அல்லவா? "தோடுடைய செவியன் விடையேறி, ஓர் தூவெண்மதி சூடி" என்று பிள்ளை அழகாக விடை பகருகிறது பாட்டில்.

எங்களுக்கு மூன்று வயதிலேயே பாட்டுப் பாட வருமா? இந்த வயதிலும் அவர் பாடி வைத்த தேவாரங்களை மனனம் பண்ண (பாடமாக்க) முடியவில்லையே! சிந்திக்க வேண்டும். மனனம் பண்ணுதல் என்றால் "மனனம் பண்ணுதல்" - மனதில் வைத்தல் என்ற கருத்தைப் பண்டிதமணி (சி.க) அவர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

பிள்ளையின் பாட்டிலே வந்த விடையைக் கேட்டுச் சிவபாதவிருதயர் அதிசயித்தார். ஆனந்தங் கொண்டார். பிள்ளையை எடுத்து அணைத்து முத்தங் கொடுத்தார். அந்தப் பிள்ளையைப் பெற்றதன் பயனை உள்ளூர உணர்ந்து மகிழ்ந்தார். இவ்விதம் ஆனந்த பரவசம் அடைந்த வேளையில், எம்பெருமானின் திருக்காட்சியும் தோணிபுரத்து (சீர்காழி) ஆலயத்திலே அவர்களுக்குக் கிடைத்தது. கண்குளிரக் கண்டுகளித்த ஞானசம்பந்தர் பாட்டினைத் தொடர்ந்து பாடினார். "தோடுடைய செவியன்" முதலாக ஒரு தேவாரப் பதிகத்தினை சீர்காழியில் தோணியப்பர் முன்னிலையிற் பாடி முடித்தார். இருவரும் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தனர். பிள்ளையும் திருஞானசம்பந்தர் ஆனார். அன்று முதற் பிள்ளைக்கு அந்தத் திருநாமமே வழங்கலாயிற்று.

இந்த நற்செய்தி ஊரெங்கும் பரவலாயிற்று. பல பாகங்களிலிமிருந்து மக்கள் திரளாக வந்து திருஞானசம்பந்தரைத் தரிசித்து வழிபட்டுச் செல்வாராயினர். இது ஓர் அற்புதமல்லவா? இதனை யாரும் செய்ய முடியுமா? சாமானியராகிய எங்களுக்கு இது கைகூடாதல்லவா? நாம் செய்யத் தக்கதென்ன? இறைவன் பேரில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய தேவாரங்களைப் பாடமாக்கி ஆலயங்களுக்குப் புனிதத்தோடு சென்று பக்தி சிரத்தையோடும் பண்ணோடும் பாடி, இறைவனை வழிபட்டு வருவதேயாகும். இதனால் நாமும் உள்ளத்தாலும் உயர்ந்து, வளத்தாலும் சிறந்து விளங்குவோம். இது திருஞானசம்பந்த மூர்த்தி

நாயனார் திருக்கடைக்காப்பில் கூறும் உறுதிமொழி. இனித் தேவாரத்தை முழுமையாகப் படிப்போம்.

முதற்றிருமுறை
திருப்பிரமபுரம்
பண் - நட்டபாடை
திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் செய்த அற்புதங்களிற் சில......!**

* ஞானப்பால் உண்டு மூன்று வயதிலே தேவாரம் பாடியமை - "தோடுடைய செவியன்..."
* பொற்றாளம் பெற்றமை - "மடையில் வாளை...."
* வணிகனுக்கு விடம் தீர்த்தமை - "சடையா யெனுமால்........."
* எலும்பைப் பெண்ணுருவாக்கியமை - "மட்டிட்ட புன்னையம்........"
* பாண்டியனது வெப்புநோய் தீர்த்தமை - "மந்திரமாவது நீறு........"
* பஞ்சந்தீரப் படிக்காசு பெற்றமை - "வாசிதீரவே காசு நல்குவீர்......."
* உலவாக்கிழி பெற்றமை - "இடரினும் தளரினும்......."
* ஆண்பனைகளைப் பெண்பனைகள் ஆக்கியமை - "பூத்தேன் தாயென........."
* திருச்சோதியிற் கலந்தமை - "காதலாகிக் கசிந்து.........."

# நினைவிற் கொள்வதற்கு.....!

| | | | | |
|---|---|---|---|---|
| வைகாசி | 1 | 15.05.97 | வியாழன் | மாதப்பிறப்பு |
| | 4 | 18.05.97 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| | 5 | 19.05.97 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 7 | 21.05.97 | புதன் | வைகாசி விசாகம் |
| | 8 | 22.05.97 | வியாழன் | பூரணை விரதம் |
| | 10 | 24.05.97 | சனி | திருஞானசம்பந்தர் குருபூசை<br>திருநீலகண்ட யாழ்ப்பாணர் குருபூசை<br>முருகர் குருபூசை<br>திருநீலநக்கர் குருபூசை |
| | 11 | 25.05.97 | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 14 | 28.05.97 | புதன் | அக்கினிநாள் முடிபு |
| | 18 | 01.06.97 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| | 19 | 02.06.97 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 20 | 03.06.97 | செவ்வாய் | கார்த்திகை விரதம்<br>கழற்சிங்கர் குருபூசை |
| | 21 | 04.06.97 | புதன் | அமாவாசை விரதம் |
| | 26 | 09.06.97 | திங்கள் | சதுர்த்தி விரதம்<br>நமிநந்தியடிகள் குருபூசை<br>சேக்கிழார் குருபூசை |
| | 27 | 10.06.97 | செவ்வாய் | சோமாசிமாறர் குருபூசை |
| | 28 | 11.06.97 | புதன் | ஷஷ்டி விரதம் |
| | 30 | 13.06.97 | வெள்ளி | இடப விரதம் |
| | 31 | 14.06.97 | சனி | ஷடசீதி புண்ணிய காலம்<br>பின்னிரவு 4.49 முதல் |

# பயில்வோர் பயிற்சிக்கு

செல்வி மனோகரராணி செல்லையா B.A.

1. தில்லையம்பலக் கூத்து உணர்த்தும் தத்துவம் என்ன?
2. இறைவன் ஏன் ஐந்தொழில் புரிகிறான்?
3. சிவமும் சத்தியும் அத்துவிதமாய்க் கலந்திருக்கும் தன்மையைக் காட்டும் திருமேனி யாது?
4. வேதம் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
5. வேதங்களை நான்காக வகுத்தவர் யார்?
6. நால் வேதங்களும் எவை?
7. செவி வழி மரபிற் கையளிக்கப்பட்டு வந்தமையால் வேதம் எப்பெயர் பெற்றது?
8. வேதத்தின் நான்கு பிரிவுகளும் எவை?
9. வேத சிரசு என்று சிறப்பிக்கப்படுவது எது?
10. வேதத்தில் அடங்கியவற்றை எத்தனை காண்டமாக வகுத்துள்ளனர்?
11. கிருஷ்ண யசுர் வேதத்தில் கூறப்பட்டவை எவை?
12. இசையால் இறைவனை வணங்குவதற்கு வழி காட்டியாய் அமைந்த வேதம் எது?
13. சதருத்திரியம் எப்பகுதியில் உள்ளது?
14. யசுர் வேதத்தில் சிவனுக்கு வழங்கிய பெயர்கள் எவை?
15. சிந்துவெளி நாகரீகம் பரவியிருந்த இடங்கள் எவை?
16. உபநிடதம் என்பதன் பொருள் என்ன?
17. உபநிடதங்கள் எத்தனை?
18. அத்துவித வேதாந்தத்தை நிறுவியவர் யார்?
19. தைத்திரீய உபநிடதத்தில் காணப்படும் அறிவுரைகள் எவை?
20. உபநிடதங்கள் ஐந்தின் பெயர் தருக.

# சைவசமய அறிவுப் போட்டி

இங்கு இடம் பெறும் வினாக்கள் பெரும்பான்மையாகச் சைவநீதியில் வெளியாகிய கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டவை.

## போட்டி இல.1

1 நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டுப்பேறு பெற்றவர்கள் யாவர்?
2 "நீதியால் வாழ மாட்டேன்" என்ற திருப்பாடலைப் பாடியவர் யார்?
3 புண்ணிய காலங்கள் ஐந்தும் எவை?
4 சிறுத்தொண்டரின் புதல்வன் பெயரென்ன?
5 பெரிய புராணத்திற் கூறப்பட்ட அடியவர் தொகை என்ன?
6 இடபவிரதம் அனுட்டிக்கும் மாதம் எது?
7 "மட்டிட்ட புன்னையம்" என்ற பதிகம் யாரால்?, எச்சந்தர்ப்பத்திற் பாடப்பட்டது?
8 விளக்கழகு, தேரழகு என்று புகழப்படும் தலங்கள் எவை?
9 "கேதீச்சரம் மேவினார் கேதாரத்தார்" என்று வரும் பாடலின் தொடக்கம் எது? யாராற் பாடப் பட்டது?
10 "யாதவன் துவரைக்கிறையாகிய மாதவன் முடி மேல் அடிவைத்தவன்" என்ற சிறப்பினை உடையவர் யார்?

**போட்டியிற் பங்கு கொள்வோர் கவனத்திற்கு:**

1. எவரும் பங்கு கொள்ளலாம்.
2. சைவநீதி இதழில் வெளியாகியுள்ள கூப்பனுடன் விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும்.
3. ஒருவர் ஒரு விடைத்தாள் மட்டுமே அனுப்பலாம்.
4. நிறைவு செய்யப்பட்ட விடைத்தாள்கள், பதிப்பாசிரியர், சைவநீதி, 61/1-F, பீர்சாய்பு வீதி, கொழும்பு - 12, இலங்கை. என்னும் முகவரிக்கு 1997-06-10 ஆந் தேதிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
5. வெற்றி பெறும் மூவர் பரிசில் பெறுவர்.
6. போட்டி அமைப்பாளர் குழு முடிபே இறுதியானது.

*ஆசிரியர்.*

உ
சிவமயம

## சைவநீதி

**சமய அறிவுப்போட்டி இல.1**

பெயர் :...............................................................

முகவரி :...............................................................

:...............................................................

...............................
கையொப்பம்

உ

சிவமயம்.

## உங்கள் பங்களிப்பு

எங்கள் எண்ணம் நிறைவுபெற உங்கள் ஒவ்வொருவரதும் நிறைவான ஒத்துழைப்பு வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் சைவநீதியின் உறுப்பினர் ஆகவேண்டும்.

## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

| | தனிப்பிரதி | ஆண்டொன்றிற்கு |
|---|---|---|
| இலங்கையில் | ரூபா 20.00 | ரூபா 200.00 |
| இந்தியாவில் | ரூபா 20.00 (இந்திய ரூபா) | ரூபா 200.00 (இந்திய ரூபா) |
| ஏனைய நாடுகளில் | $ 1.5 | $ 15 |

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

காசோலை அனுப்புவோர் "சைவநீதி" என்ற பெயரில் அனுப்புக.

**'SAIVANEETHI'**
61/1 F, Peer Saibo Street,
Colombo 12. Sri Lanka.
POSTCODE 0012

.................................................................................................................

**சைவநீதிக்கு எம் பங்களிப்பு.**

அன்புடையீர்,

சைவநீதி இதழ்களை ஒரு வருடத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கான நிதியாக ................................ இத்துடன் அனுப்பியுள்ளேன்.

காசோலை - வங்கியும் இலக்கமும்..............................................................

Name : ..............................................................

Address : ..............................................................

..............................................................

..............................................................

..........................................

கையொப்பம்.

உ
சிவமயம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்**

........................சைவநீதி சஞ்சிகை அடியேன் எதிர்பார்த்தது போன்று நல்ல விடயங்களை உள்ளடக்கி மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது பாராட்டுக்குரியது. தொடர்ந்தும் நல்ல செய்திகளோடு வெளிவரவேண்டுமென விரும்புகிறோம். ...........ஈழத்தில் உள்ள திருக்கோயில் வரலாறுகள் வரிசையாக வெளிவருவது வாசிப்பவர்களுக்கு ஊக்கமளிப்பதாக அமையலாம்................

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.
1997.05.16

*குருமகா சந்நிதானம்*

.............சிவபூமியாகிய இலங்கையில் சைவத்தை வளர்க்க வந்த "சைவநீதி" எனும் இவ்விதழ் கண்டு மகிழ்வுற்றேன். இவ்விதழில் திருமுறை, சிவாலயம், விரதம் தொடர்பான விடயங்களும் இடம்பெற்றுள்ளன. மாணவ சமுதாயத்திற்கும் பயனுள்ள விடயங்களும் இடம்பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது.

வளர்க "சைவநீதி"

சோ. குகானந்தசர்மா

14.05.97



இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 61/1F, பீர்சாய்பு வீதி, கொழும்பு-12 என்னும் முகவரியிலுள்ள ஸ்ரீ சக்தி அச்சகத்தில் அச்சிடப்பட்டு 1997-06-05 இல் வெளியிடப்பட்டது.